திராவிடநாடு

3—11—57 | ஊர வெளியீடு | விலை 10 காசு

நின்புகழே மிகுதல் வேண்டும்

கவிஞர் சாமி. பழனியப்பன்

முத்தமிழே! செம்மைவளர் தாயே! அந்நாள்
மூவேந்தர் மடிதவழ்ந்து வாழ்ந்த இன்பப்
புத்தமிழ்தே! தேநிலவே! புவியோர் போற்றும்,
பொற்புடைய தேன்மொழியே! அறிவின் ஊற்றே
தித்திக்கும் செந்தமிழே! நெருப்பில், நீரில்
தீய்த்திடினும் அழித்திடினும் மடிவு றாமல்
எத்திக்கும் புகழ்மணக்கும் தமிழே உன்றன்
இசையேயிவ் வையத்து மிகுதல் வேண்டும்!

சோதியே செழுஞ்சுடரே அறிவே அன்பே
தாய்தான அகம்புறமும் குறளும் தந்த
ஆதியே! பெருங்கடலே! கனியின் சாறே
அன்பகத்துள் நுழைந்தாய்நீ சுவடு காணேன்
ஓதுபுகழ்த் தமிழ்த்தாயே! நாளும் உன்தாள்
உன்னருளால் நான்போற்றத் துடிப்ப தல்லால்
ஏதுமிந்த வையத்துள் வேண்டேன்; உன்றன்
இசையேயிவ் வையத்து மிகுதல் வேண்டும்!

உலகத்தின் முதுமொழியே! உளம்வ ளர்க்கும்
உயர்மொழியே! மொழிபலவும் பெற்றும் இந்த
நிலவுலகில் பொலிவொடுநல் இளமை பூத்து
நின்றிலங்கும் எழிற்கன்னித் தமிழ ணங்கே!
புலவர்களின் செய்யகத்தை நாவை உன்றன்
பொலிவரங்கம் ஆக்கிநடம் புரியும் தாயே!
உலகளந்த செந்தமிழே! உயிரே! இந்த
உலகத்து நின்புகழே மிகுதல் வேண்டும்!

வீராதி வீரராகக் கருதப்பட்ட ஜுகோவ் ரஷியப் பாதுகாப்பு மந்திரிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் என்கிற பரபரப்பான செய்திகள் உலகெங்கும் பரவிக் கிடக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்திலே, ரஷியநாடு மாபெரும் விழாக் கோலம் பூண இருக்கிறது! அடிமைத் தளைகளை அறுத்தெறிந்து, மார்க்சும் லெனினும் காட்டிய பாதையிலே நடந்து, ஜாரின் ஆட்சியை அகற்றி புத்தாட்சி கண்ட புனிதத் திருநாள்தான் அது!!

வருகிற நவம்பர் 7-டன், புது ரஷ்யா மலர்ந்து நாற்பது ஆண்டுகள் ஆகப்போகின்றன. இதை மாபெரும் விழாவாக மக்கள் கொண்டாடமலா இருப்பர்! உண்மையில் 1917-நவம்பர் 7-ல் பூத்த புரட்சி மலரினைப்பற்றி நினைக்கும் ஒவ்வொரு பாட்டாளியும், ஆனந்தமும் அகமகிழ்ச்சியும் கொள்ளவே செய்வர்!!

*

நவம்பர்-7—எலியாக, முயலாக, இருந்த ஏழையும், அக்கிரமங்கள் அதிகமாகும்போது, புலியாவான், போர்க்கொடி பிடிப்பான், தன் நல்வாழ்வுக்காகப் போராடத் தயங்கமாட்டான், வெற்றியும் பெற்றே தீருவான் என்பதை, உலக மக்களுக்கு உணர்த்திய ஒப்பற்றதோர் நாளாகும். ரஷியப் புரட்சிக்கு முன், வீரமும் தீரமும் குறையாத விதத்திலே உண்டானது பிரெஞ்சுப் புரட்சி. ஆனால், தாசர்களான தரகர்களால், புரட்சி மலரின் மணம் மக்களுக்குக் கிடைக்கவில்லை! சந்தர்ப்பவாதிகளின் கைக்குப்போய், நுகரப்பட்டு, கசங்கிப்போயிற்று!! அப்படியில்லாமல், திடமான நம்பிக்கையுடன் உருவான திட்டங்களோடு, ரஷியப் பாட்டாளி மக்கள் வெற்றி பெற்றுக் காட்டினர். புது அரசும், கண்டனர். பாட்டாளிகள் அரசு! —என்பதால், இன்றுவரை, ரஷியா எனும்போது உலகத்திலுள்ள ஒவ்வொரு முற்போக்குச் சக்தியினரும், தனது தோழன் என்கிற அளவில் கருதுகின்றனர்.

*

ஆயுதங்களைக் கொண்டு, இரத்தத்தைச் சிந்தி, மனிதர்களைக் கொன்று குவித்து, அதற்குப் பிறகு புது ஆட்சியினை மலர்விக்க வேண்டிய சூழ்நிலையில் 40-ஆண்டுகளுக்கு முன் உலகம் இருந்தது. ஆனால் இன்று, எதனையும் அமைதியான வகையிலே பெறலாம், ஜனநாயக ரீதியிலே செய்யலாம், மக்களின் மனபீடம் வழங்கும் தீர்ப்பைக் கொண்டு முடிவு செய்ய முடியும் என்கிற நன்னிலை வளர்ந்து வருகிறது. ஏழைப் பாட்டாளி என்றால், தர்பார் குரலும், மிரட்டுதலும் குறைந்து வரும் காலம் இது! ஏழைகளைத் தட்டிக்கொடுத்து, காரியத்தைச் சாதிக்க வேண்டும், என்கிற கட்டத்துக்கு முதலாளிகள் வந்துகொண்டிருக்கிறார்கள்! இந்தப் போக்கில், இன்றுள்ள காங்கிரஸ் அரசும், ஈடுபட்டு வருகிறது, 'மாடல் சோஷியலிசம்' என்று பேசியபடி. உள்ளம் மாடிவீட்டின் பக்கம் இருப்பினும் உதடுகள் குடிசைகளைப்பற்றிப் பேசுமாறு அவர்களையும் செய்து வருகிறது.

*

வளர்ந்து வருகிறது உரிமைக் குரல், எத்திசையிலும்! நாட்டு விடுதலை, பொருளாதார விடுதலை எனும் குரல்கள் இன்று எதிரொலிக்காத இடமேயில்லை! அவைகளை, சில சமயங்களில் அடக்குமுறையாலும், பல சமயங்களில் சாகசத்தாலும் வீழ்த்திட ஆதிக்கபுரியினர் முயன்றாலும், மக்கள் மன்றம் பின்வாங்காது, தம் இலட்சியப் பாதையை நோக்கியே நகர்ந்துகொண்டிருக்கிறது. எப்படியும், விடுதலை விரும்பிகள் வெல்வர்! தம் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வர்! — என எதிரொலிக்கும்நாளதாகநவம்பர்7 கருதப்படுகிறது.

வழக்கம்போல், பாட்டாளி மக்களாகிய நாம், இந்த நவம்பர் 7-ல் கொள்ளவேண்டிய உறுதி "வெல்வோம்! விடுதலை பெறுவோம்!" என்பதுதான். அதை மனதில் ஒருமுறை நினைவூட்டிக்கொள்வோம்! புது வாழ்வு பெற்றுத் திகழும் ரஷ்ய மக்களுக்கு, வரவர இன்பமும் எழில் மணமும் அதிகமாகட்டும், நல்ல நிலைமையும் அன்புப் பண்பும் வளரட்டும், என்று நமது வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்வோம்!!

★

கார்மேகனார் மறைவு

37 ஆண்டுகளுக்கு மேல் மதுரை அமெரிக்கன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக விளங்கி 1951ல் ஓய்வு பெற்றவரும், சிறந்த தமிழறிஞருமான, திரு. ஆ. கார்மேகக்கோனார் அவர்கள் 22—10—57 மாலை, இயற்கை யெய்திய செய்திகேட்டு வருந்துகிறோம். நாவலர் பாரதியார் அவர்கள் தலைமையில் தமிழவேள் பி. டி. இராசன் அவர்களால் மதுரையில், மறைந்த புலவரேறுக்குப் பொன்னாடையும் 'செந்நாப்புலவர்' என்கிற பட்டமும் 1955ல் அளிக்கப்பட்ட போது, அவர்மாட்டு மதுரை மக்களுக்கு இருந்த அன்பும் மதிப்பும் விளங்கிற்று. மாணவர்கள் மத்தியிலும் கார்மேகனார் அவர்கள், பெற்றிருந்த பெருமையும் அன்பும், எவருக்கும் கிடைக்காததாகும். தமிழ், தன் செல்வர்களில் ஒருவரை இழந்துவிட்டது. துயரால் வருந்தும் அனைவருக்கும் நமது ஆறுதல்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

'பேனா'வின் துணை!

16] ஆண்டு சந்தா ரூ. 8 [3—11—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 16

"நெப்போலியன் போன்ற உலக வீரனே பேனாவின் —வலிமையைக் கண்டு பயந்தான்", என்று அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் சொல்ல, இடை மறித்து, "நெப்போலியன் பயந்தாலும் பத்திரிகைகளின் வலிமையைக் கண்டு நாங்கள் பயப்படவில்லை", என்றாராம்—காமராஜர், இந்தக் கிழமை சென்னையில் நடைபெற்ற தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில். நெப்போலியனுக்குக்கூட இல்லாத நெஞ்சுத் துணிவு தங்களுக்கு உண்டென்கிறார் காமராஜர். ஆபத்தென்போம், இதனை! ஏனெனில், பிரெஞ்சுச் சரித்திரம் நெப்போலியனை, ஒரு சர்வாதிகாரியென்கிறது. அப்பேற்பட்டவன்கூடத் தன் செயல்களை விமரிசனம் செய்யும் பேனாவுக்குப் பயந்தான். இவர், அவன் பயந்தாலென்ன, என்கிறார் — 'இந்தக் குரலை' நாடு, இவரிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், வாழ்வது, மக்களாட்சி யுகம்!!

தமிழ் நாட்டு ஏடுகளைப் பற்றி மேற்படி கமிட்டியில் காரசாரமாகப் பேசினராம். அமைச்சர் பக்தவத்சலனார் கூட, 'தரங் கெட்டு விட்டன' என்று அங்கலாய்த்துக் கொண்டாராம். தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெற்றவைகளாக விளங்கும் தேசீய ஏடுகள்பால், இவர்களுக்கே கோபம் வருகிறது. அவைகள் நம்முடையவையல்ல. ஆயினும், ஆள்வோருக்கும், அக்கட்சியினருக்கும், கோபமும் குமுறலும் ஏற்பட்டிருக்கிறது. தரங் கெட்டு விட்டது என்கிறார் உள்நாட்டு அமைச்சர்! பயமில்லை— என்கிறார் முதலமைச்சர்!!

இத்தனை நாட்களும் அணைத்துக் குலவிய தேசீய ஏடுகள், இவர்கள் 'தூ! தூ!' என்று சொல்லுமளவுக்கு, குற்றம் என்ன செய்தன என்று பார்த்தால், "செய்திகளை இஷ்டம்போல் வெளியிடுகின்றனவாம்." இஷ்டம் போல் வெளியிடுவதால், தரங் கெட்டு விட்டது என்கிறார் சகா! பயப்படேன்—என்கிறார் முதல்வர்!!

இவர்கள் இவ்விதம் வீரத்தையும், வேதனையையும் காட்டிக்கொண்ட இதே கிழமையில் பரோடாவில் நிகழ்ந்த 'பேனா வல்லுநர் மாநாட்டில்'. "புரட்சிகளை உண்டாக்குவதிலும், மறுமலர்ச்சியை உருவாக்குவதிலும் பேனாவின் துணை மிக மிக முக்கியம்" என்று விளக்கியிருக்கிறார், பண்டித நேரு அவர்கள். அதோடு மட்டுமல்ல, "எழுத்தாளர்களுக்குக் கடிவாளம் போடக்கூடாது. இதைத்தான் எழுதிப் பிரசுரிக்கவேண்டும் என்று கட்டுப்பாடு செய்யக்கூடாது. அவர்கள் இஷ்டம்போல் எழுதினால் தான் உண்மை மலரும்," என்றும் வலியுறுத்தியிருக்கிறார். பேனாவின் அருமையை நேரு வர்ணிக்கிறார்! "பூ! பேனா, ஒரு பெரிசா?", என்கிறார் காமராசர்!!

தரங் கெட்டுவிட்டது என்பவரும், அஞ்சேன் என்று வீரமுழக்கம் செய்பவரும், பத்திரிகைத் தொடர்பு அற்றவர்களல்ல. பக்தவத்சலனார் நடாத்திய 'பாரத தேவி' எதிர்க் கட்சிகளை எவ்வளவு 'தரத்துடன்' நடத்தியது என்பது யாவருக்கும் தெரியும்! பத்திரிகைகள் என்றால் ஒரு பொருட்டல்ல—என்று கூறும் காமராசரும் எத்தனை பத்திரிகைகளை ஆர்வத்தோடு துவக்கிவைத்தார்—ஆதரித்தார் என்பதை நாடும் அறியும். ஆயினும், இவர்களுக்கு இப்போது இப்படி வேதனையும் வீரமும் வெளிப்படுகிறது —ஏடுகள்பால்! என்ன காரணம்?

ஏடுகள் வெறும் 'ஜாலரா'க்களாகவும், எதிர்க்கட்சிகளின் செய்திகளை இருட்டடித்தும் சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் "அம்பை" வீசிக்கொண்டுமிருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்தப் பாதையைக் கண் மூடிக்கொண்டு செய்யாமல் ஆட்சியின் ஓட்டைகளை எடுத்துச் சொல்லும்போது, குத்துகிறது; குடைகிறது, ஆர்ப்பரிப்பும், அலட்சியமும் காட்ட முற்படுகின்றனர்.

ஏடுகள்தான் என்ன செய்யும்? டி. டி. கே. அமெரிக்கா போனவர் 'அரை வெற்றியோடு' வந்தாலாவது முரசறைந்து முழக்கலாம்! அவர் வெறுங்கையோடு வரும்போது-உண்மையைச் சொல்லாமல் முடியுமா? முதுகுளத்தூர் வட்டாரத்தில் போலீஸ் சுட்டதில் யாராவது சாகாமலிருந்தாலாவது, சமாளிக்கலாம்! செத்தார்களே பல பேர்...அதை மூடி மறைக்கவா முடியும்? அவைகள், இவைகளையெல்லாம் வெளியிடுகின்றன — ஆத்திரப்படுவதிலும், 'நெப்போலியன் அஞ்சினாலும் அஞ்சேன்' என்பதிலும் ஏற்படும் பலன் என்ன! தமக்கு 'பக்கமேளமா'யிருக்கும்போது எப்படி மகிழ்ச்சி ஏற்படுகிறதோ அதைப்போல 'கண்டனம்' தென்படும்போதும் நிதானம் வேண்டும் ஆள்வோருக்கு. அதைவிட, ஏடுகளும் இன்னபிறரும் எங்கேயும் தவறு இல்லை என்று கூறுகிற அளவுக்கு ஆட்சியினை நடத்தவேண்டும். அப்போது, அஞ்சேன் உண்மை என்பக்கமிருக்கிறது' எனலாம்! தரங் கெட்டுவிட்டது—என்றாலும் மக்கள் நம்புவார்கள்! நிலைமை அப்படியில்லை இதுபோது. இப்படி, ஆத்திரமாகப் பேசுவது வீரமுமல்ல—விவேகமுமல்ல. ஆள்வோர் ஏடுகளை எடுபிடிகளாக நினைத்தல் கூடாது! அப்படி நினைக்கும்படி இங்குள்ளவைகள் இதுகாறும் நடந்துவந்த தன்விளைவுதான்—அமைச்சர்களின் குரல் தடிப்புக்குக் காரணமாகும். நேரு அவர்கள் தெரிவித்ததுபோல் உண்மையைத் துணிவுடன் உரைக்கும் திண்மை வேண்டும் ஏடுகளுக்கு — அதை ஏற்கும் பக்குவமும் ஆள்வோருக்கு வேண்டும்.

★

பண்டிதருக்கு வேண்டுகோள்

"இந்தியைத் தென்னிந்தியா பூராவும் எதிர்க்கிறது. எண்ணிக்கையைக்கொண்டு கணக்கிடும் சிறுபான்மையைப் போன்றதல்ல இது. இது நாட்டினுடைய ஒரு பகுதி காட்டும் எதிர்ப்பாகும்" என்று குறிப்பிட்டு, பின்கண்டவர்கள் அனைவரும் கையெழுத்திட்டு பண்டிதநேரு அவர்களுக்கு, ஒரு வேண்டுகோள் அனுப்பியிருக்கின்றனர், இந்தியைக் கைவிடுமாறு கோரி. இவர்களது தமிழ் அன்பையும், நாட்டின் எதிர்காலம் கேடு சூழாமலிருக்க வேண்டுமென்கிற அக்கரையையும் தென்னகம் நிச்சயம் போற்றும். டில்லி, என்னபதில் தருமோ! என்பது ஒருபுறமிருக்க, ஒரு நல்லப் பிரச்னையில் ஒன்றுபட்டு—நாம் சொல்வதாயிற்றே என்று கருதாமல்!!—இந்நடவடிக்கை எடுக்க முன்வந்த இவர்களனைவருக்கும் தமிழ் மொழி, தன் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அறிக்கை அனுப்பிய அந் நல்லறிவாளர்கள்:—

1. சி. பி. இராமசாமி அய்யர்
—முன்னாள் துணை வேந்தர், அண்ணாமலை, காசி பல்கலைக் கழகங்கள்.

2. கே. சீனிவாசன்
—'இந்து' ஆசிரியர்.

3. டி. எம். கிருஷ்ணசாமி அய்யர்
—திருவாங்கூர் மாநில உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி.

4. சி. ராசகோபாலாச்சாரியார்
—முன்னாள் கவர்னர்-ஜெனரல்.

5. எஸ். ஜி. மணவாளராமானுஜம்
—அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர்.

6. எஸ். அனந்தராமகிருஷ்ணன்
—பிரபல தொழிலதிபர்.

7. ஆர். வி. கிருஷ்ண அய்யர்
—சென்னை சட்டசபையின் முன்னாள் செயலாளர்.

8. சி. ஆர். சீனிவாசன்
—'சுதேசமித்திரன்' ஆசிரியர்.

9. ஏ. என். சிவராமன்
—'தினமணி' ஆசிரியர்.

10. எஸ். பி. ஆதித்தன்
—'தினத் தந்தி' ஆசிரியர்.

11. எஸ். எஸ். வாசன்
—'ஆனந்த விகடன்' ஆசிரியர்

12. டி. சதாசிவம்
—'கல்கி' ஆசிரியர்.

13. காசா சுப்பராவ்
—'சுயராஜ்யா' ஆசிரியர்.

14. வி. எல். எத்திராஜ்
—வழக்கறிஞர் சங்கத் தலைவர்

15. வி. சி. கோபாலரத்தினம்
—வழக்கறிஞர் சங்கத் தலைவர்

16. எம். எஸ். ஏ. மஜீத்
—தென்னிந்திய முஸ்லீம் கல்விச் சங்க கௌரவச் செயலாளர்.

17. எம். சுப்பராய அய்யர்
—விவேகானந்தா கல்லூரி, மற்றும், சென்னை தொழிற் கல்விக் கழக 'கரெஸ்பாண்டென்ட்.

18. ஆர். கிருஷ்ணமூர்த்தி
—பச்சையப்பன் கல்லூரி தலையாயர்.

19. எம். கே. சண்முகம்
—சர். தியாகராயர் கல்லூரி தலையாயர்.

20. ஆர். பி. சேதுப்பிள்ளை
—சென்னை பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்.

21. எம். எம். பட்
—சென்னை பல்கலைக் கழக கன்னடப் பேராசிரியர்.

22. திருமதி ருக்மணி அருண்டேல்
—அடையாறு கலாக்ஷேத்திரம்

23. திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி
—பிரபல இசைவாணி.

24. டி. கே. சண்முகம்

25. டி. கே. பகவதி
—பிரபல தமிழ் நாடகக் கலைஞர்கள்.

26. ஏ. ஜி. வெங்கடாச்சாரி
—தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்.

27. எஸ். ஆர். வெங்கட்ராமன்
—இந்திய ஊழியர் சங்கச் செயலாளர்.

28. கே. கோதண்டபாணிப் பிள்ளை
—தமிழ்க் கலாச்சாரக் கழகச் செயலாளர்.

29. ஏ. சுப்பய்யா
—தென்னிந்திய விவகார ஆய்வு மன்றத் தலைவர்.

30. எஸ். நாராயணசாமி
—ஒய். எம். ஐ. ஏ. செயலாளர்

31. பி. ஜே. அனந்தராஜ்
—ஒய். எம். சி. ஏ. செயலாளர்

32. திருமதி எல். ஏ. பிதாவதியன்
—ஒய். டபிள்யூ. சி.ஏ.தலைவர்.

33. எச். சி. கோதாரி
—சென்னை ஸ்டாக் எக்சேஞ்சு தலைவர்.

34. வி. எஸ். எல். நாதன்
—தமிழ் வர்த்தகக் கழக கௌரவச் செயலாளர்.

35. எஸ். செல்லசாமி
—ஆட்சி மொழி மாநாட்டுச் செயலாளர்.

சிலுவைச் சங்கம்

—பழநி—

உலக சமாதானம் குறித்து முழக்கமிடாத அரசுகள் கிடையாது, இன்றைய உலகில். அரேபிய நாடுகளுக்குள் சண்டை மூட்டிவிடுகிறது என்று கூறப்படும் அமெரிக்காவானாலும், அங்கேரியில் பலர் மாளக் காரணமென்று கூறப்படும் ரஷ்யாவானாலும், அல்ஜீரியாவில் மக்களைச் சுட்டுப் பொசுக்கிடும், பிரான்சும், சிறுதீவு சைப்ரசுக்குச் சுதந்திரம் மறுத்திடும் பிரிட்டனும், அடிக்கடி உலக சமாதானம் குறித்துப் பேசாமலிருப்பதில்லை. புத்தர்பிரான் பிறந்த நாடு, காந்தியடிகள் இருந்த பூமி, என்று சொல்லிக்கொண்டே 'காஷ்மீர்' நடத்திக்கொண்டிருக்கும் இந்தியாகூட, அடிக்கடி உலக அன்பு குறித்து, முரசொலிக்கத் தவறுவதில்லை. அமெரிக்கத் தலைவர் ஐசனும், உலக சமாதானம் குறித்துப் பேசுகிறார் — ரஷியத் தலைவராக விளங்கும் குருஷேவும் கூறுகிறார். அணுகுண்டுபோதுமா, வேறுபுதிய குண்டு கண்டு பிடிக்கலாமா, என்கிற ஆராய்ச்சிகளை ஒரு பக்கம் நடத்திக்கொண்டே, இவ்விதம் அன்புபதேசம் அளிக்கின்றனர் ஒரு கையில் பீரங்கியும் இன்னொரு கரத்தில் சிலுவையும் ஏந்திக்கொண்டு, இவர்கள் வாயளவில் பேசுகின்றனர் எனினும் ஒரு உண்மை புலனாகின்றது. அதுதான், மக்கள் துயரற்று வாழவேண்டும் என்கிற ஆசை இவர்கள் உள்ளத்திலும் கிடக்கிறது என்பதாகும். இந்த ஆசை இருந்தாலும் இல்லாவிடினும், அது இருப்பதாகவாவது காட்டிக்கொள்வதே, இன்றைய யுகத்தின் மனிதப் பண்பாடு என்று கருதப்படுகிறது.

இந்த மனிதப் பண்பாட்டினை வாயளவில் பேசுவதோடு மட்டுமின்றி செயலளவிலும் செய்து காட்டிவருகிறது, ஒரு நாடு. அந்த நாட்டில் புத்தர் அவதரிக்கவில்லை—அன்பே சிவம் கிடையாது — காந்தியடிகள் பிறக்கவில்லை — இந்திய உபகண்டத்தைப்போல மிகப் பெரியதோவெனின் அதுவுமில்லை. சிறுநாடு! எனினும், அகில உலகத்துக்கும் ஓரு படிப்பினையாக விளங்கி வருகிறது. போர்ப்புயல் கோர உருவெடுத்து உலகமெங்கணும் வீசியபோதும், அந்நாட்டில் அன்புத் தென்றல், வீசத் தவறவில்லை. அமைதியும், சமாதானமும் எப்போதும் கிடைக்கின்றன அங்கே. ஒரே ஒரு மொழியின் மூலம் அங்கே ஒற்றுமை ஏற்படுத்தப்படவில்லை. மூலமொழியாக மூன்றுண்டு, ஆங்கே! எனினும், உள்நாட்டுக்குள் நல்ல ஒற்றுமை நிலவுவதோடு, வெளியுலகுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருந்து வருகிறது.

அப்பேற்பட்ட சுவிட்சர்லாந்து நாடு, மனித சேவைக்கு என்று எடுத்துக்கொண்ட நன்முயற்சிகளில் ஒன்று, செஞ்சிலுவைச் சங்கமாகும். வெள்ளைக் கொடியில், சிகப்பாலான சிலுவைச் சின்னம் பறக்க, அதைச் சுற்றி 80 வெளிநாடுகளின் கொடிகள் பறந்து நிற்க, இந்தச் சங்கத்தின் 19-வது உலக மாநாடு கடந்த 28-ந் தேதி முதல் வரும் 7-ந் தேதி வரை டில்லியிலே நடைபெறுகிறது.

கடந்த 13-ந் தேதிதான், உலக ஒற்றுமைக்கென விளங்கும் ஐக்கிய நாடுகள் சபையின் ஆண்டு விழா உலகெங்கும் கொண்டாடப்பட்டது. உலக சமாதானத்துக்கென அமைக்கப்பட்ட அந்தச் சபை, இன்று வாய்ப்பந்தலுக்குரிய இடமாக விளங்கினாலும், உலகில் உடனடி பேராபத்து உண்டாகாமல் காத்து நிற்கிறது. சிலுவைச் சங்கம், ஐ. நா. சபை போல, 'அரசுகளால்' அமைக்கப்பட்டதல்ல! மனிதப் பண்பு மிக்கோரைத் தன்னகத்தே கொண்டது!! அதனால்தான் போலும், மனித குலத்துக்கான சேவையை, மிகவும் பொறுப்போடு செய்து வருகிறது. போட்டியும், நானே பெரியவன் என்கிற குமுறலும், யாருடைய திறமை அதிகம் என்கிற குணமும், அரசுகளுக்குரிய சபையாக இருந்திருப்பின், ஏற்படக்கூடும். சிலுவைச் சங்கத்துக்கு, 'கிருஷ்ணமேனன்'கள் பிரதிநிதிகளல்ல! மக்கள் நல்வாழ்வில் அக்கரை கொண்ட எவரும் அச்சங்கத்தில் பணியேற்கலாம் என்பதால், அரசியல் ஆசாபாசங்களில்லாத திருக்கூடமாக விளங்கி வருகிறது!!

சிலுவைச் சங்கம், கடந்த போரின்போது ஆற்றிய தொண்டுகள் மிகமிகச் சிறந்ததாகும். எப்படியோ மனிதன், ஆத்திரத்துக்கு இரையாகி, யார் பெரியவன் என்கிற பலப் பரீட்சையிலீடுபட்டு, போர்களை உண்டாக்கிவிடுகிறான். இந்தப்போர் உண்டாகாமல் பணிபுரிவது என்பது ஒரு பக்கமிருக்க, ஏற்பட்டுவிட்ட போரால் இன்னலுக்கு ஆளாவோருக்கு யார் துணை புரிவது? நடைபெற்ற இரண்டாவது உலகப் பெரும் போரின்போது, இட்லரும் சர்ச்சிலும் வாளோடு வாள்மோதிக் கொண்டு சண்டைபோடவில்லை!

அவர்கள் சார்பில் இலட்சக்கணக்கான மக்கள், போர்க்களம் சென்றனர்!! அவர்களில் மாண்டோர் ஏராளம்; காலிழந்தோர் கரமிழந்தோர் எண்ணற்றோர் ஆவர்; கைதிகளாகப் பிடித்துச்சென்று ஆயிரமாயிரம் பேர் அடைக்கப்பட்டனர், ஒவ்வோரிடத்திலும்.

கவியரசர் தாகூர் அழகாகக்குறிப்பிட்டிருக்கிறார் **“இரண்டுஅரசுகளுக்குள் சண்டை ஏற்பட்டால் முதலில் அவர்கள் சண்டைபோடுகிறார்களே அந்த இடத்திலுள்ள புல்பூண்டுகளுக்குத்தான் நாசம் ஏற்படுகிறது”** *என்று. அதுபோல, வெறியர்கள் உண்டாக்கிவிடுகிற போர்களால் மிகமிகப் பாதிக்கப்படுவது, ஒன்றுமே அறியாத பாமர மக்கள்தான்! இவர்களிலேயிருந்துதானே, வீரர்கள் செல்லுகிறார்கள், உயிரை இழக்க!!*

இப்படிப்பட்ட வீரர்களுக்கு, ஒரு தாய்போல இருந்து, போர்க்காலத்தில் பணியாற்றியது, சிலுவைச் சங்கம். கடந்த உலகப் போரின்போது, எந்த முகாமிலும், சுவிஸ் நாடு சேராமல் நடுநிலைமை வகித்தது. அதனால் யாராரிடம் எந்தெந்த நாட்டுக் கைதிகள் சிக்கினர், அவர்களில் எத்தனைபேர் இறந்தனர், எவரெவருக்கு உறுப்புகள் போயின, அவர்கள் தத்தம் குடும்பத்தினருக்கு என்ன தெரிவிக்க விரும்புகின்றனர், அவர்களைக் கைதுசெய்த அரசாங்கம் நல்ல முறையில் நடத்துகிறதா என்றெல்லாம் கவனித்து ஆவனசெய்தது, சிலுவைச் சங்கம்! போர்க்காலத்தில் ஜினீவா நகரிலிருந்த இதன் தலைமைக் காரியாலயத்துக்கு நாள் ஒன்றுக்கு 60,000-க்கு மேற்பட்ட அஞ்சல்கள் வந்து பற்பல நாடுகளிலுள்ள பலரது குடும்பங்களுக்கும் பட்டுவாடா செய்யப்பட்டு வந்ததாம்!! அண்மையில் கொரியாவில் நடைபெற்ற சண்டையின் போதும், இரு சார்பிலும் கஷ்டமடைந்தோருக்கு, வேண்டிய உதவிகளைச் செய்தனர் இச்சங்கத்தினர்.

ஒருவருக்கு உதவிசெய்யப்போனால், உடனே மற்றவர், ‘இவன், அவனது ஆளோ?’ என்று ஐயங்கொள்கிற இக்காலத்தில், இருவரும் நம்பக்கூடிய அளவில் நடுநாயகமாக இருந்து இந்தப் பணிகளைச் செய்வதில் இச்சங்கம் பெற்றுள்ள வெற்றி, சாதாரணமானதல்ல.

*

1857! கோடைகாலம்!! ஆஸ்திரியர்களும், பிரெஞ்சுக்காரர்களும் ஒரு போரிலீடுபட்டு, காரசாரமாகச் சண்டை நடத்திக்கொண்டிருந்தனர். ஆஸ்திரியாவின் பக்கம் இத்தாலியர்கள் உதவி புரிந்தார்கள். இதனால், போர் இத்தாலிக்கும் பரவி, சால்பரினூ எனுமிடத்தில் கடும்போர் நிகழ்ந்தது. 15-மணி நேரத்துக்குள் அரைலட்சம் பேர், அவதிக்கு ஆளானார்கள்!! காயம்பட்ட அந்த வீரர்களைக் கவனிக்க, யாருமில்லை. குடிக்க நீர் கிடையாது. வழியும் இரத்தத்தைத் துடைத்து, சிகிச்சை செய்ய மருந்துகள் கிடையாது. வெயில் ஒருபக்கம்! இந்த வேதனையொரு பக்கம்!! அவர்கள்பட்ட துயரத்தையும் தொல்லையையும் கண்டு மனம் நொந்தார் ஹென்றிடியூனண்ட் எனும் பெரியார். இவர், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்தவர். இக்கொடும் போர் நடந்த சமயத்தில் இவர் இத்தாலியிலிருந்ததால், கோரங்களைக் காண நேர்ந்தது! தன்னாலானதை அவர்களுக்குச் செய்தார்!! ஆயினும், அவர்கள் பட்டபாடு, அவர் தம்மனதைவிட்டு நீங்கவில்லை. சுவிட்சர்லாந்து திரும்பியதும், இதுபற்றித் தீவிரமாகச் சிந்தித்தார். அதன் பலனாக ஐரோப்பாவிலிருந்த 64-நாடுகளுக்கும் கடிதங்கள் எழுதினார். 1863ல், ஜினிவாவில், அந் நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய மாநாடொன்று நடந்தது. அங்குதான் முதன் முதலில் செஞ்சிலுவைச் சங்கம் (Red cross society) உருவாயிற்று. “போரில் காயமடைந்தவர்களை விரோதிகளாகக் கருதி, மென்மேலும் தொல்லைப்படுத்தக் கூடாது. அவர்களுக்கு, எவரும் உதவி செய்யலாம்” என்கிற முடிவும் இம் மாநாட்டில் செய்யப்பட்டது.

இதற்குப் பிறகும் டியூனண்ட் ‘முடிந்தது காரியம்’ என்றிராமல் இந்த நற்கொள்கையினை எடுத்துரைப்பதற்காக பல நாடுகளுக்கும் சுற்றுப் பிரயாணம் செய்தார். பல இடங்களிலும் இதன் கிளைகள் நிறுவப்பட்டன.

இது ஒரு அன்பு மார்க்கம்

சாதி - மத - அரசியல், இங்கு கிடையாது.

துன்பம் எங்கேயிருந்தாலும் துடைக்கப்பட வேண்டும்.

என்கிற உன்னதக் கொள்கைகளைக் கொண்ட இச்சங்கங்களை, அமைக்க ஒவ்வொரு நாடும் ஒப்புக்கொண்டன. சண்டைக் காலத்தில், மேற்படி பணிகளைச் செய்யும் இச்சங்கம், சமாதானகாலத்திலும் வாளா இருப்பதில்லை! அப்போதும் மக்களுடைய துயர்களையெல்லாம் தீர்க்கத் தன்னாலான பணிகளைச் செய்துவருகிறது.

1863-ல் நடைபெற்ற ஜினீவா மாநாட்டில், போர்வீரர்களைப்பற்றி மட்டுமே, கருதிற்று இச்சங்கம்.

‘முடியுமா!’

‘ஆகுமா?’

‘யார் ஒப்புக்கொள்வார்கள்?’

‘யார் நம்புவார்கள்?’

என்றெல்லாம் கேள்விகள், கிளம்பின. ஆனால், மிகப் பிடிவாதமாகவும், நியாயத்தை யாவருக்கும் உணர்த்தி வசப்படுத்த முடியும் என்கிற நம்பிக்கையாலும், இதன் எண்ணங்கள் வளர்ந்தன. 1914-18ல் நடைபெற்ற முதல் உலகப் பெரும் போரின்போது, வெறும் உதவிச் சங்கமாக மட்டும் இருந்தது. அடுத்த உலகப் போரின் போது, **மத்திய செய்தி நிலையம்** *என்கிற அமைப்பை நிறுவவும், இரு சார்பினரிடமும் சிக்கிய வீரர்களிடமிருந்து செய்திகளைப் பெற்று அவரவர் குடும்பத்துக்கு அனுப்பவும் வாய்ப்புப் பெற்றது! 1929ல் ஜினீவாவில் கூட்டப்பட்ட உலக வல்லரசுகள் யாவும், இந்தக் கோரிக்கைக்கு இணங்கி, கையெழுத்திட்டனர்!!*

சண்டை போட்டாலும், அதனால் பாதிக்கப்பட்டோருக்கு

பொங்கல் வாழ்த்துக்கள்

விற்பனையாளர்கள் தேவை:

கண்ணைக் கவரும் வண்ண வாழ்த்துக்கள் தயார். விபரங்கட்கு: 15 புதிய காசு தபால் தலை அனுப்பவும்.

முத்துப் பதிப்பகம்

842, ஆட்டுமந்தை தெரு,
கீழவாசல், தஞ்சை.

உதவவேண்டும் என்பதில், கருத்து வேற்றுமை காட்டவில்லை எந்த வல்லரசும்! அக்கிரமம் செய்வதில்கூட, முறையோடு நடந்து கொள்ள முன்வந்தன வல்லரசுகள்!!

போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, துணிமணிகளைச்சேகரித்து அளித்தும், மருந்துகள் வைத்து கட்டுவது போன்ற நற்பணிகளையும், உணவு வழங்குவதையும் மேற்கொண்டு வருகிற சிலுவைச் சங்கம், சமாதான காலத்திலும் மக்களுக்குப் பணி புரியத் தயங்குவதில்லை. நில நடுக்கம் — வெள்ள நிவாரணம் — புயல் கொடுமை போன்ற சமயங்களில், ஓடி உதவுவதுடன், பொதுமக்களுக்கு சுகாதார உதவிகளையும் அளித்து வருகிறது. குழந்தைகள் நலன், காசநோய் ஒழிப்பு, ஏழைகளுக்கு மருத்துவ விடுதிகளில் வசதிகள், முதலியவைகளைச் செய்து வருகிறது. இந்தச் சங்கம், இந்திய உபகண்டத்தில் 1920ல் ஆரம்பிக்கப்பட்டது.

முதல் உலகப் போர் கடைபெற்றபோது கனடாவில், இளைஞர் செஞ்சிலுவைச்சங்கம்ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் காரணமாக, இளம் வயதிலேயே குழந்தைகள் மனதிலும், இந்த எண்ணங்கள் தூவும் வகையில் ஆங்காங்கும் பல சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இப்போது உலகமெங்கும், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் ஏற்படுத்தப்பட்டு, விளங்கி வருகின்றன. சுமார் 4 கோடி குழந்தைகளை உறுப்பினர்களாக உலக முழுமையும் கொண்ட இதன் நோக்கங்கள் — சுகாதாரத்தை வளர்த்தல், பிறருக்கு உதவி செய்தல், சர்வதேச நட்பை வளரச் செய்தல் ஆகியவைகளாகும். இந்தப் பணியில், எங்கும் குழந்தைகளை ஈடுபடுத்தும் நோக்குடன் இச்சங்கம் வளர்ந்து வருகிறது.

*

"செஞ்சிலுவைக்கு, எந்தவித வேற்றுமைகளும் கிடையாது. மக்களைப் பிரித்திடும் 'முகாம்'களைப் பற்றியோ, கொள்கைகளைப் பற்றியோ, கவலையில்லை. எங்களுக்கு எல்லோரும் ஒன்றுதான்! மனித குலத்தவரான அனைவரையும் எங்களுடைய சகோதரர்களாகவே பாவிக்கிறோம். மனித அன்பே, எங்கள் நோக்கம். உலகத்தின் முன்னால், அந்தோ! ஆங்காங்கும், பேத மேகங்கள் காட்சியளிக்கின்றன இன்று. மேற்கு, கிழக்கு என்று நிலைமை ஏற்பட்டு, போர் வாடை அடிக்கிறது. போர்க் கூச்சலும், ஆயுத ஓசையும் கேட்கிறது. அழிவுக் குண்டுகளைப் பற்றி ஆராய்ச்சிகள் நடக்கின்றன. இவைகளைச் சமாளிக்க செஞ்சிலுவை தன் கொடியை உயர்த்திப் பிடிக்கிறது! சமாதானம், மனித அன்பு, ஒற்றுமை எனும் முழக்கங்களோடு, வருந்துவோர் துயரைத் துடைக்கும் பொறுப்பை செஞ்சிலுவை, தளராது செய்யும்," என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராக விளங்கும் பிரான்கோ பான்செட் என்பார் டில்லி மாநாட்டை ஒட்டி செய்திவிடுத்துள்ளார். ஆர்வமும் மனித அன்பும் மிளிருகின்றன, இச்செய்தியில்!

மனித உலகில், அன்பும் பண்பும் நிறைந்திட அடிப்படை மாற்றங்கள் நிகழ வேண்டியிருக்கிறது. இதை, மறுப்பாரில்லை.

ஆயினும், அந்த மாறுதல்கள் ஏற்படுகிறவரை, மனிதன் அடையும் இன்னல்களுக்குப் பரிகாரம் காண யாராவது ஒருவர் வேண்டுமல்லவா?—அந்த யாராவது ஒருவராக, பணியாற்றி வருவதே, செஞ்சிலுவைச் சங்கமாகும்.

துயரடைந்தோரின் கண்ணீரைத் துடைக்கும் திருப்பணியைச் செய்யும், செஞ்சிலுவையின் நோக்கங்கள் விரிவான அளவில் பரவினால், உலக அமைதிக்கு வழிகாண முடியும்.

ஆனால், ஆதிக்கம் செலுத்தும் அரசுகள், சிலுவைச் சங்கத்தையும் புகழ்கின்றன; அதே சமயம் மனித வர்க்க அழிவுக்குமல்லவா, வழிதேடுகின்றன! கலிங்கப் போரில் உயிர் துறந்தும், உறுப்பிழந்தும் கடும் வேதனைகளுக்காளான மக்களைக் கண்ட மாவீரன் அசோகன், ஆயுதங்களை வீசி விட்டு புத்தரின் கொள்கைகளை ஏற்றதன் காரணமாக "போர் புரியேன் இனி!", என்று சூள் எடுத்துக்கொண்டானும். அந்த நற்பண்பு, அரசுகளுக்கு ஏற்பட்டால், அடடா, உலகம் எவ்வளவு அழகாகயிருக்கும்? அமெரிக்காவுக்கும் ரஷியாவுக்கும் கூடப் போகவேண்டாம்- அசோக சக்கரத்தையே தமது ஆட்சிச் சின்னமாக வைத்திருக்கும் டில்லி அரசாவது செய்து காட்டலாமல்லவா! அகில உலக திருக்கூடமாம்—சிலுவை மாநாட்டினையும் கூட்டுகிறது; அதே சமயத்தில் பிரிட்டனிலிருந்து போர் விமானங்கள் வாங்கவுமல்லவா 'ஆர்டர்' கொடுக்கிறது!!

★

பர்மாவிலிருந்து!

இங்கு பர்மிய நாட்டில் வந்து வதியும் இந்தியர்களில் 100 ல் 60க்கும் அதிகமான பேர் தமிழர்கள். மிச்சமுள்ள 40 சதத்தில் 20 சத விகிதம் பேர் முதலாளிகள். மீதம் 20 சத விகிதத்தினர் நடுத்தரமான நிலையுடையவர்கள்' தமிழர்களில் 8 சத விகிதம் கூட முதலாளிகளை காண்பது அரிது. இவ்வாறிருக்க சமீபத்தில் பர்மா சர்க்கார் அன்னியர் பதிவு செய்துள்ளவர்களுக்கு பேருக்கு 50 ரூபாய் வருடந்தோறும் வரிபோலச் செலுத்திவர வேண்டுமென உத்தரவிட்டிருக்கிறது. அன்றாடச்சோற்றுக்கு ததிங்கிணதோம் போடும் 45 சத விகிதத் தமிழர்கள் நிலை இதனால் எவ்வளவு கேவலமாகியிருக்கக் கூடுமென்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளலாம். பர்மாவில் வசிக்கும் அன்னியர்களில் நகரங்களிலும், தலைநகரிலும் வசிக்கும் தமிழர்கள் மிகக்குறைவு. பர்மாவிலுள்ள கிராமங்களில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் ஒட்டிய வயிறும், உலர்ந்த கண்களுமாகக் காட்சியளிப்பதைக்காணலாம். ஆகவே தற்போது பர்மா சர்க்கார் கொண்டு வந்துள்ள பதிவுக்கட்டணத்தால் பாதிக்கப்படுபவர்கள் தமிழர்களே அதிகமாவார்கள்.

பர்மா சர்க்கார் தங்கள் நாட்டை இரத்தமும், வியர்வையும் கலந்து மண்குழைத்துச் செப்பனிட்டுத் தந்த உழைப்பாளிகளையே புறக்கணிக்கத்தொடங்கிவிட்டது.

—"தந்தி"

ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பியா ஆகிய கண்டங்களை இணைக்கும் பாலத்தின் நடு இடமாக சிரியா இருப்பதே அது வல்லரசுகளின் கவனத்தில் இருக்கும் காரணம். இப்பொழுது மட்டுமல்ல பல்லாண்டுகட்கு முன்னிருந்தே சிரியா பல பெரும் அரசுகளின் கவனத்தைக் கவர்ந்து ஒரு போர்க்கள நாடாகவே காட்சியளித்து வந்தது.

எகிப்தியர்கள், அசிரியர்கள், பெர்சியர்கள் ஆகியோரின் நாடுபிடிக்கும் ஆசைக்கு பலியாகியிருந்தது சிரியா. பின்னர் 312 கி. மு.வில் மாவீரன் அலெக்சாந்தரால் கைப்பற்றப்பட்டது. ஆன்டியோக்கைத் தலைநகராகக்கொண்டு ஆளப்பட்டது மாசிடொனியரால்.

கி. மு. 64ல் ரோமானியர்களால் கைப்பற்றப்பட்டு ஆளப்பட்டு வந்தது, சிரியா. அது ரோமர்களின் கையில் 636 கி. பி. வரை இருந்தது. பின்னர் படையெடுத்து வந்த அராபியர்களின் கையில் சிக்கியது. அதற்குப் பிறகு சிரியா முஸ்லீம் உலகத்தின் முக்கியமானதொரு பகுதியாக மாறியது.

பிறகு 1516 கி. பி.யில் சுல்தான் சலீம் தன்னுடைய ஒட்டோமான் படையுடன் சிரியாவைப் பிடித்து அரேபியா, எகிப்தையும் ஆக்ரமித்துக் கொண்டார். அதற்குப் பின்னர் சிரியா, முதல் உலக யுத்தம் வரை ஒட்டோமான் துருக்கியர் கையில்தான் இருந்தது.

அதற்குப் பின்னர் அது ‘நேச’ நாடுகளின் வசமானது.

1920ம் ஆண்டு மார்ச் திங்கள் 2ம் நாள் ஹுஸ்ஸெய்னின் மகனை ‘பெய்சல்’ என்பவர் சிரியாவின் மன்னனாக சிரியன் காங்கிரசாரால் முடிசூட்டப்பட்டார். ஆனால் அவர் ஆட்சி சொற்ப காலமே நீடித்தது. நேச நாட்டினர் சான்ரெமோ மாநாட்டில் “சிரியா, லெபனன் இரு நாடுகளும் பிரெஞ்சு அரசாங்கத்தால் ஆளப்படவேண்டும்” என்று தீர்மானித்தனர்.

இந்தத் தீர்மானத்தை 1922 ஜூலை 24ம் நாள் வரை ‘ஐக்கிய நாடுகள் சங்கம்’ அங்கீகரிக்கவில்லை. ஆனாலும், பிரெஞ்சு நாட்டினர் 1920 ஜூலை 25ம் நாளே

மதனகோபால்

டமாஸ்கஸ்ஸில் நுழைந்துவிட்டனர். தொல்லைகள் மிக ஏற்ற இந்த நாட்டின் சரிதத்திலேயே இந்தப் பிரெஞ்சு நாட்டினரின் ஆட்சி ஒரு துக்ககரமான நிகழ்ச்சியே.

பிரெஞ்சு ஏகாதிபத்யக்கொடுமை மக்களின் உள்ளத்தைக் கிளறிப் புரட்சி செய்ய தூண்டியது. 1925 ஜூலையில் மக்கள் தங்கள் அதிருப்தியை தெரிவிக்கும் முகத்தான் பொதுப் புரட்சி செய்தனர்.

> மத்திய கிழக்கிலே போர் மூளுவதின் பயங்கர அறிகுறிகள் தென்படுகின்றன. அதற்கு முக்கியமான காரணமாக இரு நாடுகளைக் கூறலாம். ஒன்று சிரியா, மற்றொன்று துருக்கி. சிரியாவிற்கு ரஷ்யர்கள் உதவுவதும், துருக்கிக்கு அமெரிக்கர்கள் உதவுவதும் தெரிந்ததே.

புரட்சியை அடக்க பிரெஞ்சு ஏகாதிபத்யவாதிகள் பலவழிகளைக் கையாண்டனர். டமாஸ்கஸ் மீது குண்டு போட்டும், நகரங்களைக் கொளுத்தியும், தண்டனையும் அபராதமும் போட்டும் புரட்சியை அடக்கப் பார்த்தனர். சந்தனம் அரைக்க, அரைக்க மணப்பது போல் புரட்சியும் அடக்க, அடக்கபெரும் அளவில் வளர்ந்தது. பிரெஞ்சு ஏகாதிபத்ய வாதிகளின் இத்தகைய நடவடிக்கைகளைக் கண்ட மற்ற உலக நாடுகள் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்தனர். உடனே பிரெஞ்சு அரசாங்கத்தார், எம். டி. ஜூவனல் என்பவரை ஓர் உடன்படிக்கைக்கு இணங்கவைக்க அனுப்பியது. அவர் தோல்வியுடன் திரும்பினார். சிரியாவில் சில அழிவுச் செயல்களையும் செய்துவிட்டு. அவருக்குப்பின் பான்சாட் என்பவர் சென்றார். அவர் ஒருவித உடன்படிக்கைக்கு வரச் செய்தார்.

அதன்படி தேர்தல் நடந்தது 1928ல். 1930 மேத் திங்களில் சட்டசபையைக் கலைத்துவிட்டார். பிரெஞ்சு அரசாங்கத்தைத் தலைமைப் பீடமாக அச் சட்டசபை ஏற்காததால்.

“பிரண்ட் பாபுலேர்” என்னும் கட்சி ‘பிளம்’ என்பவரின் தலைமையில் ஆட்சிக்கு வந்தது. அது ஒரு திருப்பு முனையாக ஆனது, பிரெஞ்சு, சிரியா உறவுக்கு செப்டம்பர் 1936ல் ஒரு உடன்படிக்கை “பிராங்கோ சிரியன் உடன்படிக்கை” குவய்டி ஆர்சேயில் எழுதப்பட்டது. சிரிய சட்டமன்றத்தால் இந்த உடன்படிக்கை ஒத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் பல பெரிய பிரெஞ்சு அதிகாரிகளாலும், அரசியல்வாதிகளாலும் அது எதிர்க்கப்பட்டதால் அந்த உடன்படிக்கை பிரெஞ்சு அரசாங்கத்தாரால் கைவிடப்பட்டது.

1938 ஜூலை 4ம் நாள் பிரெஞ்சு துருக்கியிடம் ஓர் உடன்படிக்கையை “சிரியாவின் வடபகுதியான அலெக்சான்டெரட்டாவின்

சன்ஜரக்கை பிரெஞ்சும், துருக்கியும் ஒன்றாக "ஆள்வது" என்று ஏற்படுத்திக்கொண்டது. இது சிரிய மக்களிடம் பெரும் அதிருப்தியை உண்டுபண்ணியது. அது மட்டுமன்று; பிரெஞ்சு அலெக்சான்டெரட்டாவை துருக்கிய அரசாங்கத்திற்கே அளித்துவிட்டது. இதுதான் சிரிய, துருக்கியரிடம் பிளவையும், வெறுப்பையும் உண்டுபண்ணியது.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது சிரியா மறுபடியும் போர்த்தளமாக மாறியது. பிரெஞ்சின் சரணுக்குப் பிறகு சிரியாவில் இருந்த பிரெஞ்சு ஹை கமிஷனர் பிரெஞ்சு அரசாங்கத்துடன் சேர்ந்துகொண்டு சிரியா, லெபனனிற்கு வந்த ஜெர்மன் தூதுக்குழுவை வரவேற்றார்.

1941-ஜூன் 8-ம் நாளில் பிரிட்டிஷ், பிரென்சு படையினர் சிரியாவினுள் நுழைந்து போரிட்டு வென்று, ஓர் உடன்படிக்கை எழுதி வாங்கினர்.

ஜெனரல் காட்ரக்ஸ் சிரியா மக்களுக்கு "பிரெஞ்சு அரசாங்கத்தின் ஆட்சி முடிந்து, சுதந்திர நாடாகிறது சிரியா" என்று அறிக்கைவிட்டார் சுதந்திர பிரான்சின் பேரில்.

போருக்குப் பிறகு சிரியாவில் பல அரசாங்க மாற்றங்களும், இராணுவப்புரட்சிகளும் நடந்தன.

மார்ச் 30ம்நாளிலிருந்து ஆகஸ்டு 14-ம் நாள் வரை (1949-ம்ஆண்டு) சிரிய படைத்தலைவர் க(ர்)னல் ஹீசன் ஜயாம் என்பவரின் இராணுவ ஆட்சியில் இருந்தது சிரியா.

சிறு காலமே இந்த இராணுவ அரசாங்கம் இருந்தாலும் அது ஒரு பாடம் கற்பித்தது சிரிய மக்களுக்கு. 1949-ஆகஸ்டு 14-ம் நாள் மற்றொரு இராணுவப் புரட்சி நடந்தது. தற்காலிக அரசாங்கமாக அஷீம் எல் அடாசி என்னும் முதிர்ந்த அரசியல்வாதியான பழைய தலைவரின் தலைமையில் ஏற்படுத்தினர்.

1949-நவம்பர் 15-ம் நாள் ஜனநாயக அரசியல் சட்டம் ஏற்படுத்துவதற்கு வேண்டிய சட்டமன்றத் தேர்தல்கள் நடந்தன. சிரியா ஒரு குடியரசு நாடாக இருப்பதா அல்லது 'இராக்'குடன் சேர்ந்து ஒரு நாடாக வாழ்வதா என்றதோர் பிரச்சினை கிளம்பியது.

அதிகமான இடம் பெற்ற 'பாபுலா பார்ட்டி'காரர்கள் இராக்குடன் இணைந்திருப்பதை விரும்பினர், பெரும்பாலான சுயேச்சை அங்கத்தினர்கள் சிரியா சுதந்திர நாடாக இருப்பதையே விரும்பினர்,

சட்ட மன்றத்திலே இராக்குடன் இணைந்திருப்பது என்று 10-வாக்குகள் (62-வேண்டும் என்றும் 52-கூடாது என்றும்) அதிகமாக பெற்று பாபுலர் பார்ட்டி சட்டமியற்றியது எனினும், அது ஒரு பிளவை உண்டு பண்ணிவிட்டது அக்கட்சியிலும், இராணுவத்திலும், கடைசியில் சிரியா குடியரசு நாடாகவே இருப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஓர் ஆண்டிலேயே மூன்று இராணுவப் புரட்சிக்கு ஆளான சிரியாவில் இனி அமைதி நிலவும். அரசாங்கம் செவ்வனே நடைபெறும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் நிலைமை வேறு விதமாக மாறிவிட்டது.

1951-நவம்பர் திங்கள் 29-ம் நாள் கர்னல் அபுப்சிஷாக்கிலி என்பவர் மற்றொரு இராணுவப் புரட்சிக்கு வித்திட்டு, வெற்றிகரமாக நடாத்தினார். ஆறு மாதங்கள் பொறுத்து, அவரும் விலக்கப்பட்டார். (கடந்த டிசம்பர் திங்களில் சிஷாக்லியும் மற்ற எதிர்ப்பாளர்களும் நீதி மன்றத்தால் தண்டனையளிக்கப்பட்டு சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டனர்.)

பிரான்சில் நடக்கும் மந்திரிசபை மாற்றங்கள்போல்தான் சிரியாவிலும் நடந்தன, சிறு வேறுபாடுகளுடன்.

பின்னர் சாப்ரி அஸ்ஸாலி "செகரட்டரி ஜெனரல் ஆப்தி நேஷனல் பார்ட்டி" முதன் மந்திரியானார். அடுத்து பரிஸ் எல் கவ்ரி முதன்மந்திரியானார். மறுபடியும் 1955-பெப்ரவரியில் சாப்ரி அஸ்ஸாலி முதன் மந்திரியானார். ஜூன் 1956 ஆண்டு மூன்றாவது முறையாக சாப்ரி அஸ்ஸாலி முதன் மந்திரியானார்.

1955-ஆகஸ்டு 18-ம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் இப்போதைய குடியரசுத் தலைவர் சுக்ரி எல் குவாட்லி. அவர் மூன்று முறை தலைவராக இருந்திருக்கிறார். சிரியாவின் தலைவராகப் பணியாற்றி வரும் சுக்ரி எல் குவாட்லிக்கு அறுபத்து ஐந்து வயதாகிறது.

பிரிட்டிஷாரால் ஏற்படுத்தப்பட்ட பாக்தாத் ஒப்பந்தத்தில் இரான் சேர்ந்த மறுநாளே எகிப்தும் சிரியாவும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. "நாடுகளின் எல்லைகளிலோ அல்லது படையிலோ அன்னியர் ஆதிக்கம் செலுத்தும் மறுகணமே இரு நாடுகளும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று ஒப்பின. அந்த ஒப்பந்தம் தான் டமாஸ்கஸ் ஒப்பந்தம்.

சிரியாவின் தலைவர் குவாட்லி மாஸ்கோவிற்கு சென்று வந்த பிறகு சிரியாவிற்கு ரஷ்யப் படையும் ஜெட் விமானங்களும் உதவுகிறது என்று அமெரிக்கர் கூறுகின்றனர்.

துருக்கி, ரஷ்யாவின் வலுவான எதிரி, சிரியாவின் படையில் கம்யூனிச விரும்பிகள் பெரும் அதிகாரிகளாக இருப்பதைக் கண்டும், ரஷ்யாவின் உதவியைக் கண்டும் பயமடைந்து அமெரிக்காவின் உதவியுடன் தன் படையை பெருக்குகிறது.

அமெரிக்காவின் பக்கம் துருக்கியும், ரஷ்யாவின் பக்கம் சிரியாவும் இருக்கின்றன. இவ்விரு நாடுகளின் பூசல்களைக் காரணமாக வைத்துக்கொண்டு இவ்விரு வல்லரசுகளும் போர் தொடுக்க முனைகின்றன.

★

முகவரி மாற்றம்:

A. K. வில்வம்

அருண்மொழி B. O. L.

எஸ். ஜி. முதலியார் தெரு,

ஆர்க்காடு (N. A.)

"இந்தி"-பெரும்பான்மையோர் மொழியா!

'கெர்' அறிக்கை கூறுவதென்ன?

இந்தி மொழியே மத்திய ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று வாதாடுபவர்கள், தங்கள் வாதத்திற்கு ஆதரவாக இது வரை என்னென்ன காரணங்களை எழுப்பிவந்திருக்கிறார்கள்? இந்தி மொழி இலக்கண இலக்கிய வளம் நிரம்பியது—ஆகவே அது ஆட்சி மொழியாக விளங்கவேண்டும் என்று கூறுகிறார்களா என்றால், இல்லை! இந்தி மொழியிலேதான் ஏராளமான விஞ்ஞானச் செல்வம் இருக்கிறது என்று இயம்புகிறார்களா என்றால், கிடையாது. இந்திதான் இந்தியாவிலேயே மிகப் பழைய மொழி என்று வாதாடுகிறார்களா என்றால், கிடையாது. "இந்தத் தகுதிகள் எவையும் இந்தி மொழிக்கு இல்லை—கிடையாது—உண்மைதான் — ஆனால், இந்திய மக்களின் பெரும்பாலோர் பேசும் மொழி அதுதான்—அந்த ஒரே காரணத்திற்காகத்தான் அதனை நாங்கள் ஆட்சி மொழியாக ஆக்க விழைகிறோம்—வேறு காரணம் ஏதும் இல்லை" என்று இயம்புகிறார்கள். ஆனால் இந்த வாதமாவது நியாயமானதுதானா என்று பார்த்தால், இல்லை என்கிற முடிவுக்குத்தான் நாம் வந்து தீரவேண்டியிருக்கிறது.

இந்தியாவில் பெரும்பான்மையோரால் பேசப்படுகிற தகுதிகூட இந்தி மொழிக்கு இல்லை என்கிற உண்மையை, டாக்டர் கெர் தலைமையில் அமைக்கப்பட்ட இந்தி மொழி ஆட்சிக்குழுவினரே அழுத்தந் திருத்தமாக அறிவித்திருக்கிறார்கள். அந்தக் குழுவினரின் அறிக்கை பெரியதோர் புத்தகமாக வெளிவந்திருக்கிறது. அந்தப் புத்தகத்தின் 28-ம் பக்கத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற 14 மொழிகளைப்பேசுகிற மக்கள் தனித்தனி எத்தனைப்பேர் என்கிற புள்ளிவிவரத்தை அளித்திருக்கிறார்கள். அதிலே, இந்தி—இந்துஸ்தானி—உருது—பஞ்சாபி ஆகிய நான்கு மொழிகளைப் பேசுகிற மக்களின் மொத்த எண்ணிக்கை 14,99,44,311 (14 கோடியே 99 லட்சத்து 44 ஆயிரத்து 311) என்று தெரிவிக்கப்பட்

'ஆரம்பக்கல்வி'கருத்து

டிருக்கிறது. இந்த நான்கு மொழிகள் தவிர்த்த மற்றைய மொழிகளைப் பேசும் மக்களின் எண்ணிக்கை 20,69,37,83 (20 கோடியே, 69 லட்சத்து, 37 ஆயிரத்து 83)

இந்தப்புள்ளிவிவரங்களிலிருந்து, ஏறத்தாழ 15 கோடி பேர் மட்டும் தான் இந்தி முதலிய நான்கு மொழிகளைப் பேசுகிறவர்கள் என்பது, மிச்சமுள்ள 21 கோடிபேர் இந்தி அல்லாத மொழிகளைப் பேசுகிறவர்கள் என்பதும் வெளிப்படை. ஆம்! இந்திய மக்களில் கிட்டத்தட்ட ஐந்தில் இரண்டு பகுதியினர் மட்டும்தான் இந்தி முதலிய நான்கு மொழிகளைப் பேசுகிறார்கள். ஐந்தில் மூன்று பகுதியினரோ ஏனைய மொழிகளையே பேசுகிறார்கள். ஐந்தில் இரண்டு பகுதி என்பது பெருந்தொகையா? ஐந்தில் மூன்று பகுதி என்பது பெருந்தொகையா? நாம் கூறத் தேவையில்லை. இந்த நிலையிலும் ஒரு சிலர், இந்திய மக்களில் பெரும்பான்மையோர் பேசும் மொழி இந்திதான் என்று கூறுவார்களானால் அதைவிடப் பெரும் பொய் வேறென்ன இருக்கமுடியும்?

இந்தச் சமயத்தில் மற்றொரு முக்கியமான உண்மையையும் கவனிக்கவேண்டும். இந்தி—இந்துஸ்தானி—பஞ்சாபி—உருது ஆகிய நான்கு மொழிகளையும் பேசும் மக்களின் மொத்த எண்ணிக்கைதான் 15 கோடி. இந்தி மொழியை மட்டும் பேசுபவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 11 கோடிதான். 11 கோடி பேர் மட்டுமே பேசுகிற ஒரு மொழியை மெஜாரிடி மக்களின் மொழி என்று கூறுவது உண்மைக்கு நேர்மாறான பேச்சன்றி வேறென்ன? இந்தப் 11 கோடி பேர் பேசுகிற இந்தி மொழியாவது உண்மையில் ஒரே மொழிதானா என்று பார்த்தால் இல்லை. இந்தி இந்தி என்று நம்மிடையே பேசப்படுவதெல்லாம், பந்தேரி — கண்ணோஜி — பிரஜ்பாஷா—பங்காரு—காரிபோலி—அவதி—அகேலி—தாட்டிஸ்காரி—மைதிலி — போஜ்புரி — மகதி ஆகிய பதினோரு மொழிகளின் தொகுப்பாகும். இந்தியாவின் ஆட்சி மொழியாகப் புகுத்தப்படுவது, இந்தப் பதினோரு வகை மொழிகளில் ஒன்றான காரிபொலி என்பதுதான். அந்தக் காரிபோலியை மட்டும் பேசுகிறவர்களின் எண்ணிக்கை, அதிகமாக இருந்தால், இரண்டு மூன்று கோடிதான் இருக்க முடியும். இவ்வளவு சிறுபான்மையோரின் மொழியைத் திரித்துக் கூறி, அந்தக் காரணத்தை முன்

"........ஆங்கில மொழி இதர இந்திய மொழிகளைப்போல் ஒரு இந்திய மொழி என்று பம்பாய் உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்புக் கூறியிருக்கிறது. துரதிர்ஷ்ட வசமாக ஆங்கிலேயர்கள் மீதுள்ள ஆத்திரம் ஆங்கில மொழிமீது திருப்பிவிடப்பட்டுள்ளது. இப் பிரச்சினை பூராவும் அரசியல் நோக்கத்தினால் கெட்டுவிட்டது.

இந்தியைப் புகுத்துவதால் இந்தி பேசாத பிரதேச மாணவர்களுக்குப் பெரும் இடைஞ்சல் உண்டாகும். இந்தி பேசாத மக்கள் தாழ்ந்தவர்களாக்கப்படுவர்."

ஐதராபாத்
அக் 27

—பிராங்க் அந்தோனி
ஆங்கிலோ இந்தியர் சங்கத் தலைவர்

விட்டு அதனை ஆட்சி மொழியாக ஆக்கவேண்டும் என்று இயம்புவது எப்படி நியாயமாகும்?

மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக எந்த மொழி இருப்பது சிறந்தது—ஆங்கிலமா அல்லது இந்தியா?

இந்த மிக முக்கியமான கேள்விக்கு, சிந்திக்கும் திறமை படைத்த அத்தனை பேரும் ஒரே ஒரு விடையைத்தான் அளிக்க முடியும்.

ஆங்கிலம்—ஆங்கிலம் —ஆங்கிலம் என்பதுதான் அந்த விடை'

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டு எல்லையோடு முடிந்துவிடுகிற எல்லா விவகாரங்களையும் தமிழில்தான் நடத்த வேண்டும். தமிழ்நாட்டுச் சட்டமன்ற நிகழ்ச்சிகளா? உயர் நீதிமன்றம் உட்பட எல்லா நீதி மன்றங்களின் நடவடிக்கைகளா? கல்லூரிகள் உட்பட எல்லாக் கல்வி நிலையங்களிலும் பல்வேறு பாடங்களைப் பயிற்றுவிப்பதா? இவை அத்தனைக்கும் தமிழ்தான் பயன்படுத்தப்பட வேண்டும்.

அதுபோலவே தெலுங்கு நாட்டில் இந்தப் பணிகள் அத்தனையும் தெலுங்கு மொழியில் நிகழ்த்தப்படவேண்டும்.

அதுபோலவே ஏனைய மாநிலம் ஒவ்வொன்றிலும், அந்த மாநிலத்து நடவடிக்கைகள் அத்தனையும், அந்த மாநிலத்து மொழியிலேயே நடைபெறவேண்டும்.

ஆனால் மத்திய அரசாங்கத்தின் நிகழ்ச்சிகள், நடைமுறைகள் முதலியன மட்டும் ஆங்கிலத்தில் நடைபெறவேண்டும். மத்ய அரசு, மாநில அரசுகளோடு உறவாடவும் மாநில அரசுகள்ஒன்றோடொன்று உறவாடவும் ஆங்கிலமே பயன்பட வேண்டும்.

இந்தியாவில் இதுபோது மூண்டெழுந்துள்ள மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய ஒரே ஒரு வழி—நியாயம் நிறைந்தவழி — இதுதான்.

இந்திய அரசியல் திட்டத்தில் ஏற்ற திருத்தத்தை உடனடியாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்ய முயல்வதே இந்தியாவின் வருங்காலச் சிறப்பிலும் வளர்ச்சியிலும் அக்கறை படைத்த அத்தனை பேரின் உடனடிக் கடமையாகும். ★

இந்த ஆசிரியர்கள்!

— (தாயுமானசாமி) —

எழுத்து மேதைகளைப் பற்றிய எண்ணம், பரோடாவில் நடைபெற்ற உலக எழுத்தாளர்களின் மாநாட்டைக் கண்ணுறும் எவருக்கும் ஏற்படக்கூடும்! பேனாவின் சக்தியினைப்பற்றி, பலவிதமாகச் சொல்வர். பேனா பிடித்தவர்கள், அளித்துச் சென்றிருக்கும் அறிவுச் செல்வங்கள், பலதரப்பட்டவை. ஒவ்வொன்றும், ஒவ்வொரு விதத்திலே மனித வளர்ச்சிக்கும், மனித ஓய்வுக்கும் உறுதுணை புரிந்து வருகின்றன. இந்த நூல்களையெல்லாம் எழுதிய ஆசிரியர்கள், என்னென்ன குணாதிசயங்கள் கொண்டவர்கள் என அறிய ஆசை ஏற்படக்கூடும்.

*

"பிரஞ்சுப் புரட்சி"யைப் படைத்த கார்லைல், தான் முதன் முதலில் எழுதிய கையெழுத்துப் பிரதியை தன் நண்பன் சாண்ஸ்டுவர்டு மூலம் டைலர் அம்மையாரிடம் கொடுத்து வைத்திருந்தார். பாவம், அந்த அம்மையார் அதைத் தொலைத்துவிட்டார். ஆனால் கார்லைல் கலங்கினானில்லை. பல மாதங்களின் கடினமான உழைப்பின் பயனாக மீண்டும் "பிரஞ்சுப் புரட்சி"யை உருவாக்கினார். அது மிகவும் உன்னதமாக அமைந்தது. பழைய பிரதி காணாமற்போனதால் இரண்டையும் ஒத்துப்பார்க்க முடியவில்லை. இருப்பினும் இவ்வளவு அரியதான தொரு படைப்பை எப்படித்தான் அவர் மீண்டும் நினைவுபடுத்தி எழுதினாரோ! அவரே சொல்கிறார், உலகில் சிறந்த மேதாவி ஆவதற்கு 90 சதவிகிதம் கடும் உழைப்பும் 10 சத விகிதம் ஆர்வமும் இருக்கவேண்டுமென்று.

சில எழுத்தாளர்கள் வேடிக்கையான சூழ்நிலைகளை அமைத்துக் கொண்டும் விநோதமான பழக்கங்களைக் கைக்கொண்டும் தங்கள் படைப்புகளை இயற்றியிருக்கின்றனர்.

வோர்ட்ஸ்வொர்த் எப்போதும் தோட்டத்தில் திறந்த வெளியில் இருந்துதான் கவிதைகள் புனைவது வழக்கமாம். பிரடரிக் ஹாரிஸன் என்ற எழுத்தாளருக்கு பவுண்டன் பேனாவினால் எழுத வராதாம். இறகுப் பேனாதான் உபயோகிப்பாராம். உலகப் போரைப் பின்னணியாகக் கொண்டு பல பெருங்கதைகள் எழுதியுள்ள அலிஸ்டர் மாக்லீன் என்பவர் தினமும் சரியாக 2,000 வார்த்தைகள் வீதம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சாப்பாட்டுக் கூடத்திலேயே உட்கார்ந்து எழுதுவாராம்!

பால்ஸக் என்ற எழுத்தாளரின் போக்கே தனியானது. தினமும் குறிப்பிட்ட அளவு வார்த்தைகள் எழுதுவது வழக்கமாம். அப்படி எழுதுவதற்குக் கற்பனை ஓடவில்லையென்றால், அந்த அளவு வார்த்தைகளை பைபிள் அல்லது செய்தித்தாட்கள் இவைகளிலிருந்து எடுத்து எழுதிப் பழக்கத்தை விடாமல் கைக்கொள்வாராம். அந்தோணி டிராலப்பி

வேறு ரகத்தைச் சேர்ந்தவர். அவருடைய ஏவலாள் தினமும் அதிகாலை 5-மணிக்கு ஒரு வாளி தண்ணீரை அவர் முகத்தில் ஊற்றி எழுப்பவேண்டும். எழுந்து எழுத ஆரம்பித்தால், கால் மணி நேரத்திற்கு 200-வார்த்தைகள் வீதம் மளமளவென்று எழுதிக் குவித்துவிடுவாராம். எழுத ஆரம்பித்தால் பொழுதை ஒரு சிறிதும் வீணாக்கமாட்டாராம். இடம் எதுவானாலும் எதிக்கொண்டே இருப்பார். தங்கும் இரயில்வே பிளாட்பாரம், ஓடும் இரயில், கப்பல் தளம் ஆகிய இடங்களில் இருந்தாலும் எழுதிக்கொண்டே இருப்பாராம்!

சார்லஸ் டிக்கன்ஸ் அநேகமாக இரவு நேரங்களில்தான் எழுதுவாராம். கடிகாரத்தை முன்னால் வைத்துக்கொண்டு அவசர அவசரமாக எழுதிக்கொண்டேயிருப்பாராம். ஏனென்றால் அதை வெளியிடுவதற்காகப் பதிப்பாளர்கள் வீட்டு வாசலில் காத்துக்கொண்டேயிருப்பார்களாம்!

அலெக்ஸாண்டர் டூமாஸ் கட்டுரைகள் எழுதுவதற்கு சிகப்புத் தாளும், கவிதைகள் எழுத மஞ்சள் நிறத்தாளும். பெருங்கதைகள் எழுத ஊதா நிறத்தாளும் உபயோகிப்பாராம்! இந்த அபூர்வப் பேர்வழி தன் காதலிக்குக் கடிதம் எழுத எந்த வண்ணத் தாளை உபயோகித்தாரோ! மேலும் இவர் ஒரு நூலை இயற்ற உபயோகித்த பேனாவை, மற்றொரு நூலை எழுத உபயோகிக்கமாட்டாராம். ரோனால்டு பேர்பாங்க் என்ற எழுத்தாளர் எப்போதும் ஊதா நிறக் கனத்த தாட்களையே உபயோகித்து வந்தாராம். வால்டர் பேட்டர் என்ற எழுத்தாளருக்குத் தான் எழுதிய குறிப்புகளையெல்லாம் வெள்ளைக் காகிதத்தில் எழுதி அவைகளை ஒழுங்காக மேஜையின்மீது அடுக்கிவைத்துக் கொண்டபின்தான், எழுத ஓடுமாம். இராபர்ட் பிரிட்ஜஸ் என்பவர் தன்னுடைய வெள்ளிக் கத்தியினால் ஆக்ஸ்பர்டு கரையிலிருந்து தன் கையாலேயே வெட்டிக்கொண்டு வரப்பட்ட இறகுப் பேனாவினால்தான் எழுதுவாராம்!

பிரிஸ்ட்லிக்குத் தனி அறையில் உட்கார்ந்து அமைதியான சூழ்நிலையில்தான் எழுத முடியும். ஆனால் பி. ஜி. வோட்ஹவுஸ் பொதுஅறையில் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு எவ்வளவு அமைதியற்ற சூழ்நிலையிலும் எழுதிக்கொண்டேயிருப்பாராம்.

ஆனால் காலரிட்ஜ் போன்றவர்கள் இருக்கமுடியாது. அவர் எழுதிய "குப்லாகான்" முழுவதையும் கனவில் கண்டும் கேட்டதுமாம். அதை அப்படியே நினைவுபடுத்தி வரிக்கு வரிக்கு அதேமாதிரி எழுதினாராம். பெர்னார்டுஷாவும், எச். ஜி. வெல்ஸூம் தாங்கள் எழுதப்போவதை அப்படியே டைப் அடித்து விடுவார்களாம். சுலபமான முறை. வின்ஸ்டன் சர்ச்சில் தன் அறையில் முன்னும் பின்னும் நடந்துகொண்டே எழுதவேண்டியவற்றைச் சொல்ல அதை அவருடைய சுருக்கெழுத்தாளர் குறிப்பெடுத்து டைப் பண்ணிக் கொடுத்துவிடுவார். இதைவிட எளிதான முறை வேறு கிடையாதெனலாம்.

சாமர்ஸட் மொஹாம் காற்றோட்டமான அறை, அழகுமிக்க சோபாக்கள், கண்கவர் விளக்குகள், உயர்வகை தாள்கள் முதலிய ஆடம்பரச் சூழ்நிலையில் எழுதுவாராம். இவர் இன்னும் பல அரிய படைப்புகள் அளித்துக்கொண்டே இருக்கிறார். பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் எப்போதும் அடிமைபோல் எழுதமாட்டார். மிகக் கடுமையாக உழைத்து ஒரு படைப்பை அளித்தபின் சிறிது காலம் ஓய்வு எடுத்துக்கொண்டு தான் மறுபடியும் எழுதுவார்.

ஜான்ஸன் சமாசாரம் இரக்கத்திற்குரியது. பாவம், இடைவிடாமல் ஒரே வாரத்தில் மிகக் கடுமையாக உழைத்து இயற்றப்பட்ட "ராஸ்ஸெலாஸ்" மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டுதான் தன் அன்னையின் சவ அடக்கச் செலவைச் சமாளித்தாராம். கோல்டுஸ்மித் "டிராவலர்" மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டுதான் ஜெர்மனி போய்வந்தாராம்.

இராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன் மிகவும் நோய்வாய்ப்பட்டுப் பொறுக்கமுடியாத வேதனைப்பட்டுக்கொண்டிருந்த காலத்தும் சில பல அரிய நூற்களை இயற்றினார். அந்த நிலையில் அவர் படைத்த அரிய நூற்களில் "வெயிலிமாவின் கடிதங்கள்" ஒன்றாகும்.

★

மகிழ்கிறோம்

வருமானத் துறை
அறநிலையத் துறை
கல்வித் துறை
விவசாயத் துறை
உள்நாட்டுத் துறை
கூட்டுறவுத் துறை

இவைகளில், தமிழ் மூலம்
நிர்வாகப் போக்குவரத்துகளை
நடத்துவதென சென்னை அரசு
முடிவு செய்திருப்பதாக அறி
கிறோம். தமிழுக்கு ஒரு பக்கம்
ஊறு வருகிறதெனும் செய்தி
கேட்டு, நாட்டவர் பெற்றிருக்
கும் உணர்ச்சியின் விளைவே
இந்நடவடிக்கை யெனினும்
மகிழ்கிறோம்; பாராட்டுகிறோம்
கொஞ்ச நாட்களுக்கு நடத்தி
பிறகு 'சரியில்லை' என்று
விடாதபடி, தொடர்ந்து தமிழ்
மணம் எல்லாத் துறைகளிலும்
வீசுவதற்கான காரியங்களை
அரசினர் செய்ய வேண்டு
மெனத் தெரிவித்துக்கொள்ளு
கிறோம்.

★

தூத்துக்குடியில்

மும்முனைப் போராட்ட
தின்போது உயிர் நீத்த
தோழர் மந்திரம் அவர்களது
துணைவியாருக்கும், ஒரு கா
இழந்த ஆசிரியர் குருசா
அவர்கட்கும், தலைமைக் க
கம் அளித்த ரூ 500-யுடன் ந
ரக் கழகச் சார்பில் ரூ 50-
சேர்த்து தோழர் குருசாமிக்
கால்போடும் வகைக்
தேவைப்பட்ட தொகையா
ரூபாய் 300-ம்; தோழர் ம
திரம் அவர்களது மனைவிய
ருக்கு ரூ 250-ம் அளிக்கும்
உள்ளத்தையுருக்கும் நிகழ்ச்
13—10—57 அன்று நடை
பெற்றது. தோழர் எம். எ
சிவசாமி, நிதியினை, அளி
தார். நிகழ்ச்சியில் பேராசி
யர் அன்பழகன் எம். எல்.
சி. பி. சிற்றரசு ஆகியோ
கலந்துகொண்டனர். செயல
ளர் ஜோசப் நன்றி நவின்றா

★

கப்பல் வரப்போகிறதாம்!

"நல்ல அழகி. உங்கள் பெயர் புகழ் ஓங்கும்!"

"அதனால்தான் ஆசைப்படுகிறேன்."

"வயதுதான் கொஞ்சம், அதிகம்."

"பரவாயில்லை! ஆடை அணிகலன்களைப் பூட்டினால், சரியாகிப் போகிறது. அளவெடுத்து, வேண்டியவைகளை நீரே, செய்து கொடுத்துவிடும்..."

"ஆகா! அப்படியே—பார்த்தால் பிரமிப்பூட்டும் வகையில் செய்துதருகிறேன். நீங்கள் மட்டும்...?"

"சொல்லும்! நான் என்ன செய்யவேண்டும்?"

"பணத்தைக் கொடுத்துவிட வேண்டும்..."

"சரி! தருகிறேன்!!"

வயதானவளானாலும், கன்னியோ அவள் என்று கேட்பீர்கள்! அல்ல, அல்ல. அவளிருந்தால், புகழன்றோ, பெருகும்! பெருமூச்சன்றோ விடப்போகின்றனர் ஏனையவர்கள்!!—அந்த ஆனந்தத்தால், 'பழசா'னாலும் கவலையில்லை, விலை எத்தனை இலட்சமானாலும் கவலையில்லை, கொடு என்று பேசி முடிவு செய்துவிட்டான்.

* * *

யாரிந்த மைனர்? யாரந்தப் பெண்? யாரந்த வியாபாரி?—என்று கேட்பீர்கள். ஏனெனில், வெறும் கித்தாப்புக்காகப் பெண் தேடுவோரும், இருக்கின்றவளை இன்னொருவன் தலையில் கட்டப் பார்க்கும் சாமர்த்தியசாலியும் உண்டென்று அறிய ஆவல், துடிக்கத்தான் செய்யும். பழங்காலத்து ஜமீன்தாரர்களுக்கு, இன்ன வீட்டில் இன்னவள் இருக்கிறாள் என்கிற தகவல் வந்தால், எப்படியாவது அவளைத் தன்னுடைய கட்டிலறைக்குக் கொண்டுவர வேண்டுமென்பதில் ஆர்வமும் பரபரப்பும் இருக்குமாம்! இதன் காரணமாகவே பல ஜமீன்கள், போர்க்களமானதாகவும் கேள்விப் பட்டிருக்கிறோம்!! ஊரார் மெச்சுவதற்காகவும் மிரளுவதற்காகவும் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்ட ஜமீன்தாரல்ல, இங்கே விலை பேசுகிற ஆள். காட்டுராஜா தர்பார் நடாத்திய ஜமீன்களையும் சிற்றரசுகளையும் ஒழித்துவிட்டதாக 'ஜம்பம்' அடித்துக் கொள்கிறதே, அந்த இந்திய சர்க்கார்தான், பழசானாலும் பரவாயில்லை என்று விலைபேசி வாங்கியிருக்கிறது!

அரங்கண்ணல்

பெண் என்று குறிப்பிடப்பட்ட பொருள் 'ஹெர்குலீஸ்' எனும் கப்பல்! விற்கும் வியாபாரி வேறு யாருமல்ல, பிரிட்டன்தான்!!

கடந்த உலகப் பெரும்போரின் போது, எதிரிகளுடன் போராடுவதற்கென்று, இந்தப் போர்க்கப்பல், தயார் செய்யப்பட்டதாம். போர் முடிந்துவிடவே, இதற்கு, உபயோகமில்லாமல் இருந்ததாம். அதனை டில்லி, விலைக்கு வாங்கி இருக்கிறது! ஏன் இந்திய அரசு இந்தப் போர்க்கப்பலை வாங்குகிறது? அவ்வளவு அவசரமாக வாங்கி எந்த நாட்டுடன் சண்டைக்குக் கிளம்பப் போகிறது என்று கேட்கத் தோன்றும், அறியோம், நாம்! ஆனால், செய்தி வந்திருக்கிறது அக்டோபர் 29-ந் தேதி, 'மெயில்' ஏட்டில்.

பணத்தைக் கொட்டி வாங்கப்படும் இந்தப் போர்க்கப்பலை, சீர்திருத்தமெல்லாம் செய்து 1959-க்குள் ஒப்படைக்கப் போகிறதாம் பிரிட்டன்! அதற்கு, இப்போதே விலைபேசி, இந்திய அரசின் சார்பில் வாங்கப்பட்டுவிட்டது!

அமெரிக்கா சென்றேன்—பிரிட்டனுக்கும் போனேன் — பிற்பாடு மேற்கு ஜெர்மனிக்கும் வந்தேன்—ஊகூம்......என்கிறார் கிருஷ்ணமாச்சாரி.

பெட்டி ஒன்றை எடுத்துக் கொண்டு இவ்வளவு நாடுகளுக்கும் போனாரே ஏதாவது கொண்டுவராமலா இருப்பார் எனகிற ஆவலுடன் நேரு போன்றோர், திறந்து பார்த்து பெட்டி காலியாக இருப்பதைக் கண்டு கலக்கமடைவதாக 'விகடன்' கேலிச் சித்திரம் தீட்டியுள்ளது, கடந்த கிழமை! விகடன், டி. டி. கே.வுக்காகத் தேர்தலில் வேலை செய்த ஏடு—அது, இப்படிக் கேலிச் சித்திரம் போட்டு, வெறுங்கையுடன் திரும்பிவிட்டார் டி. டி. கே. என்று உரைக்கிறது!

முன்னாள் நிதி அமைச்சர் தேசுமுக், **"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு அவசியம் வெளிநாட்டுப் பண உதவி தேவை. இல்லாவிட்டால்......"** என்று எச்சரிக்கையும் பெருமூச்சையும் கலந்து தெரிவிக்கிறார்.

நேருவோ "மந்திரிகளே! கவர்னர்களே! பணத்தை மிச்சம் பிடியுங்கள் — சிக்கனம் செய்யும்

கள்—பாரதமாதா, இக்கட்டிலிருக்கிறாள்," என்று அடிக்கடி ஆலோலம் பாடுகிறார்.

கொடிகளைக் கார்களில் பறக்கவிடாதீர்கள்—மாளிகைகளில் அதிக மின்சாரம் எரிக்காதீர்கள் சின்ன விஷயமானாலும் சிக்கனத்தைக் கடைப்பிடியுங்கள்! அப்போதுதான், ஐந்தாண்டுத் திட்டத்துக்குப் பணம்பெற முடியும்—அதற்காக எந்தச் செலவையும் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று அனுதினமும் பேசப்படுகிறது.

பணக்கஷ்டத்தால், திட்டத்தையே குறைத்துக்கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது.

பணத்துக்காக, வரிகளைப் போட்டு மக்களிடமிருந்து வசூலிக்கத் தவறாதீர்கள் என்றும் மாநிலங்களுக்கு டில்லி தாக்கீது அனுப்புகிறது.

சீனா — ஜப்பான் — ஜெர்மனி— இங்கிலாந்து — அமெரிக்கா, இப்படி, யாரார் கொஞ்சம் புன்சிரிப்பைக் காட்டுகிறார்களோ, அங்கெல்லாம் ஓடுகிறார்கள் — பணம், பணம் என்கிற பல்லவியோடு.

இதே சமயத்தில், இலட்சக்கணக்கான ரூபாய்களைக் கொட்டி கப்பல் வாங்குகிறார்கள் — அதுவும் போர்க்கப்பல்! அந்தக் கப்பலாவது புதிதோ என்றால், போருக்காகச் செய்து உபயோகப்படுத்தப்படாமல் இத்தனை காலமும் இங்கிலாந்து பூட்டிவைத்திருந்த கப்பல்!! 1959-ல் கிடைக்குமாம்—'ரிபேர்' எல்லாம் செய்த பிறகு. 'ஆர்டர்' கொடுத்துவிட்டது, டில்லி.

போர்க் கப்பலுக்கு 'ஆர்டர்' கொடுக்கும் டில்லி, ஏனிக் காரியத்தை செய்கிறது என்று பார்க்கும்போதுதான், ஜம்பத்துக்காக அழகியை விலைபேசும் ஜமீன்தார் கவனத்துக்கு வருகிறார். பெரிய கப்பல்! போர்க்கப்பல்!!—இந்தியாவிடம் இருக்கிறது என்று, பக்கத்து நாடு பாகிஸ்தான் மிரளும், இலங்கை வியப்போடு பார்க்கும், பர்மா ஆச்சரியப்படும் என்கிற 'கித்தாப்பு' தவிர, வேறெதும் பலன் கிடைக்கப் போவதில்லை. பாடுபடும் பாட்டாளிக்கோ, உழைத்துலரும் விவசாயிக்கோ, சம்பள உயர்வு கேட்கும் சர்க்கார் சிப்பந்திகளுக்கோ, கப்பலால் பயன் ஏற்படப்போவதில்லை! நிலத்தில் விட்டு உழச்செய்யும் 'டிராக்டர்' அல்ல — ஆலைக்கு உபயோகப்படப்போகும் இயந்திரமல்ல—போர்க் கப்பல் அது!!

நேரு அவர்கள், ஜப்பானிலும் சரி, டில்லிக்கு வந்தபிறகும் சரி, வானத்தை வட்டமிடும் வண்ணப் புறாவைப்போல், அழகாகவும், அருமையாகவும், சில சமயங்களில் ஆத்திரம் கக்கும்படியாகவும், உலக நாடுகளுக்கு சமாதான உபதேசம் செய்கிறார். ஆயுதசாதனங்களைக் குறைத்துக்கொள்ளும்படி அமெரிக்காவுக்கு வலியுறுத்துகிறார்—சமரசத்துக்கு வருமாறு ரஷியாவுக்கு ஆலோசனைகள் அளிக்கிறார். செஞ்சிலுவைச் சங்க மாநாட்டில் பேசும்போது, இவர் புத்தரின் பிறப்போ—இயேசுவின் இன்னொரு அவதாரமோ—என்று எண்ணுகிறபடி, அவ்வளவு உருக்கமாக, உலகில் 'போர்'கள் ஏற்படாமலிருக்க வேண்டுமென்று சங்கநாதம் செய்கிறார்! இதோ, அவரது அரசு, இலட்சக்கணக்கில் விரயம் செய்து கப்பல் வாங்குகிறது!!

*

''கப்பல் வாங்கிவிட்டால் போதுமா?''

''பிறகு!''

''அந்தக் கப்பல் எப்பேற்பட்டது தெரியுமோ? ஒரே சமயத்தில் பல ஆகாயவிமானங்களை ஏற்றிக்கொண்டு செல்லக்கூடியதாக்கும்!''

''அப்படியா!''

''இதென்ன தெரியாததுபோல் கேட்கிறீர்க்ள்? போர்க்காலங்களில் இவைகளில் விமாஎங்களை ஏற்றிக்கொள்ளலாம். எங்காவது குண்டுகளை வீசவேண்டுமென்றால், எல்லா விமானங்களும், திடீரெனப் பறந்துசென்று, குண்டுகளைப் பொழியும்...''

''அப்படியா?''

''அப்படியா என்று கேட்கிறீர்களே. அந்த உபயோகத்துக்குத்தானே, இப்படிப்பட்ட கப்பலை நாங்கள் கட்டினோம்.

*

கப்பல் வாங்கியாயிற்று! பழசோ, பயன்படுத்தப்படாததோ, இந்தியாவின் தலையில் கட்டிவிட்ட பிரிட்டன், இப்போது, இப்படி தெரிவித்துள்ளதாம் — அதனால், வாங்கிய கப்பலுக்குத் தேவையான போர் விமானங்களையும் நீங்களே செய்து அளியுங்கள் என்று இந்தியா 'ஆர்டர்' கொடுக்கப் போகிறதாம்!!

எழுபதுக்கு மேற்பட்ட ஆகாய விமானங்கள்.

அத்தனையும், குண்டுபோடும், போர் விமானங்கள்.

ஆடம்பரத்துக்காக அழகியைத் தேடி, அவளுக்கு அணிமணிகளையும் வாங்கிப்போட்டு, அழைத்துவர விரும்பும் ஜமீனையும் மிஞ்சுகிறது, டில்லி தர்பார். சமாதானக் குரல் பேசிக்கொண்டே, சண்டைக் கப்பலையும், அதற்காக ஆகாய விமானங்களையும் வாங்குகிறது!!

Multi million sterling order. என்று 'மெயில்' தெரிவிக்கிறது. அதாவது, பல இலட்சக்கணக்கான ஸ்டர்லிங் மதிப்புக்கு இந்தப் பேரம் நடக்கிறதாம்!!

"Informed Indian sources in London regard it as a "Logical development" following the Purchase of the British aircraft carrier."

அதாவது, விமானங்களை ஏற்றிச் செல்லும் கப்பலை வாங்கியதைத் தொடர்ந்து, அதில் ஏற்றிச் செல்லவேண்டிய விமானங்களும் வாங்கப்படவேண்டிய ஒரு நடவடிக்கை என்றே இலண்டனிலுள்ள விஷயமறிந்த வட்டாரங்கள் கருதுகின்றனவாம் இதனை!!

நாமும் மறுக்கவில்லை-விமானங்களை ஏற்றிச் செல்லும் கப்பலை வாங்கினால், அதில் வைப்பதற்கான விமானங்களையும் வாங்க வேண்டியதுதான். அழகியை விரும்பினால், அவளுடைய ஆடம்பரத்துக்குத் தேவையான அணிமணிகளையும், வாங்கிப் பூட்டத்தான் நேரும்.

தீ, பிடிக்காது!

தீ, பிடிக்காத துணியொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்களாம், ரஷ்யாவில், இதைக் கொண்டு தைத்த சட்டையைப் போட்டுக்கொண்டு, எஃகு ஆலைகளிலும், பட்டறைகளிலும் வேலை செய்கிறார்களாம். மிகவும் மெல்லிய உருக்குத் "துணி", இந்தச் சட்டையில் பொருத்தப்பட்டுள்ளதாம். இதேபோல மின்சாரத் தொழிலாளர்கள், மெல்லிய செப்புத் "துணி" பொருத்தப்பட்ட சட்டைகளை உபயோகிக்கிறார்களாம்.

பணத்துக்குத் திண்டாடும் சர்க்கார்,

சமாதானமே எமது குறிக்கோள் என்று முரசொலிக்கும் நேருவின் சர்க்கார்,

இதற்காக பல இலட்சக் கணக்கில் பணத்தைக் கொட்டலாமா!!

இதுவே, நம் கேள்வி. யார் வீட்டுப் பணம் இத்தனையும்! Big order எனவும் 'மெயில்' தலைப் பிட்டிருக்கிறது. மிகப் பெரிய 'ஆர்டராம்' இது!

மாநிலங்களுக்கு அதிகப் பணம் கேட்டால் மறுக்கலாம்—மக்களைக் கிட்டிகட்டி வரிமேல் வரி போட்டுக் கசக்கலாம்—புதுப் புது பாசனங்களை அமைக்க முடியாது எனக் கூறலாம் — பஞ்சராகம் பாடலாம் —பிச்சைப் பாத்திரம் ஏந்தி ஒவ்வொரு நாட்டுக்கும் ஓடலாம் — அதே சமயத்தில் பணத்தை இப்படியும் வீணாக வாரியிறைக்கலாமா!! இப்போது இந்தக் கப்பலும், குண்டுபோடும் விமானங்களும் இல்லையென்று குறைபட்டுக் கொண்டது யார்? இவைகள் எல்லாம் வேண்டுமென்று யார் கேட்டார்கள்? ஆடம்பரத்துக்கு 'கப்பல்' வாங்கும் நிலையிலா இருக்கிறது நாடு! அய்யகோ, இந்தச் செய்திகளையெல்லாம் கண்டால், ஏக்கமும் துக்கமுமன்றோ கிளம்புகிறது!!

இந்த நிலைமையினை அறியாரா நேரு? அவருக்குத் தெரியாமலா இவ்வளவு பெரிய "ஆர்டர்" கொடுப்பார்கள், இந்திய அரசினர். நிச்சயம், அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். தவறு என்று தெரிந்தாலும் தான், அதைக் கண்டிக்கும் திறனற்று, தனது மந்திரிகளுக்கு வக்கீலாகிறாரே! டி. டி. கே.வுக்கே வக்கிலாகும் போது, இந்த நடவடிக்கைக்குக் காரணமான இராணுவ இலாகாவின் அமைச்சராயிருக்கும் கிருஷ்ணமேனனையா கண்டிக்கப் போகிறார் —அவரை விட்டால், பறந்தோடி இவர் சேதியைச் சொல்ல, ஆள்கிடையாதே!

"சுயநலம், எவ்வளவு பெரியவர்களையும் வீழ்த்திவிடும்" என்கிற முதுமொழி, எவ்வளவு பெரிய உண்மையாகிறது. இவர்கள், சுயநலங்களுக்காக, நாடு இன்னும் என்னென்ன அலங்கோலங்களையெல்லாம் காணப்போகிறதோ!!

★

சாவடி

"ஒற்றன்"

" நந்தவனத்திலோர் ஆண்டி—அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டுவந்தானொரு தோண்டி—அதைக்
கூத்தாடி கூத்தாடி போட்டுடைத்
தாண்டி..."

"என்ன மணிமுடி! பாட ஆரம்பிச்சிட்டே...ஆனந்தம் அதிகமோ?"

"ஆனந்தம் ஏது பெரியய்யா! வர வர அது குறைந்துகொண்டே போகும் என்கிற அறிகுறி தெரிகிறதேயன்றி, வளரும் என்கிற நம்பிக்கைகூட அல்லவா, நாசமாகிக் கொண்டிருக்கிறது..."

"என்ன மணிமுடி! ஏன் இவ்வளவு சலிப்பு? என்ன நடந்தது?"

"மந்திரத்தால் மாங்காய் வரவழைப்பானே தெருக்கூத்தாடி. நீங்கள் பார்த்திருக்கிறீர்களல்லவா?"

"பார்த்திருக்கிறேன். அவர்கள் எப்படி அதைத் தந்திரமாகச் செய்கிறார் என்பதை மறைந்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்கூட ஒரு படத்தில் செய்து காட்டினாரே..."

"ஊம்! அந்தத் தெருக்கூத்தாடியின் ஞாபகமும்தான் வருகிறது பெரியய்யா, இந்தக் காங்கிரசாட்சியின் போக்கைப் பார்க்கும்போது"

"நீ எதைப்பற்றி இப்படி குறிப்பிடுகிறாய் மணிமுடி?"

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் குறித்து, நாட்டில் எப்படியெப்படியெல்லாம் பேசப்படுகிறது..."

"ஆமாம்! நாட்டின் நல்வாழ்வே, அதனுள் அடக்கமாயிருக்கிறது என்பதால்தானே, கடன் வாங்கியோ, பட்டினி கிடந்தோ, எப்படியாவது அதை முடிக்கவேண்டும்—என்கிறார்கள் எல்லாத் தலைவர்களும்."

"அதாவது, மந்திரத்தால் மாங்காய் வருவதுபோல, இந்தத் திட்டத்தால் கிடைக்கும் என்கிறார்கள்!"

"மாங்காயை மந்திரத்தாலல்ல தந்திரத்தால்தானே வரவழைக்கிறான் கூத்தாடி..."

"அது இருக்கட்டும், பெரியய்யா. அதுபோல, இத்திட்டம் செய்யப் போகிறது நாட்டின் பிரச்சினைகளில் பல தீர்ந்துவிடும் என்றுதானே பேசுகிறார்கள்"

"பேசுகிறார்களா! படம் எடுத்துக் காட்டுகிறார்கள் — நாடகம்கூட நடத்தச் சொல்லுகிறார்கள் — போகுமிடமெல்லாம் மந்திரிகள் பேசுகிறார்கள்..."

"முன்ஷியைத் தெரியுமல்லவா, பெரியய்யா, உங்களுக்கு?"

"தெரியுமாவது! மரமந்திரி என்று பேரே வாங்கியவராயிற்றே!! ஐக்கிய மாகாணக் கவர்னராகக்கூட இருந்தாரே..."

"அவர் பம்பாயில் பேசியிருக்கிறார்—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய இலட்சியமே இந்தியாவிலுள்ள மக்களுக்கு ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் வருமானம் பெறும்படி செய்வதே என்று..."

"என்ன! என்ன! ஒருத்தருக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாயா? அப்படியென்றால், மாதம் 30 ரூபாய் ஒருவனுக்குக் கிடைத்தால் போதும் என்று கருதுகிறார்கள்!!"

"போதும் என்று கருதவில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய இலட்சியம் இது தானாம்..."

"ஒரு வேளை, இந்தியாவில் இப்போது ஒவ்வொருவருக்கும் மிகமிக மோசமாக மாதம் 5 ரூபாய் அல்லது 10 ரூபாய் கிடைக்கிற நிலைமையிருக்கும் போலும். அதை 30 ஆக்க முயற்சிக்கிறார்கள் போலிருக்கிறது."

"அதுதானில்லை! இப்போது இந்திய உபகண்டத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் மாதாமாதம் ரூ. 23 வருமானம் கிடைப்பதாக அவர்களே கணக்கெடுத்திருக்கிறார்கள்"

"அப்படியானால் கேவலம் ஏழே ஏழு ரூபாயை உயர்த்துவதைப்பற்றித் தானா, ஆகா, ஊகூ, ஐந்தாண்டுத் திட்டம் முடிந்தால் எல்லாம் சரியாய்ப் போய்விடும் என்று பேசுகிறார்கள்... நான்கூட உண்மையில் அப்படித் தானே நம்பிக்கொண்டிருக்கிறேன்."

"இப்படி நம்பிக்கை வரவேண்டும் என்பதற்காகத்தான் பிரச்சாரம் செய்கிறார்கள்! முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது கூறினார்களே, இது முடிந்ததும் நாட்டில் உணவுத்தட்டுப்பாடே யிருக்காது... வெளிநாடுகளை நம்பவேண்டிய அவசியமில்லை... எங்கும் நெல்லும் கோதுமையும் நிறையும் என்று... இப்போது என்ன பேசுகிறார்கள்?"

"பஞ்சம், பஞ்சம், என்று பத்திரிகைகளிலே பார்த்தேன் மணிமுடி. மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா..."

"ஒவ்வொரு இடத்திலும் இந்தக் குரல் கேட்பதானால்தான், நேருவே வருத்தப்பட்டிருக்கிறார். வெளிநாடுகளிலிருந்து கூட உணவுப் பொருள்களை இன்னும் அதிகமான அளவில் இறக்குமதி செய்யவேண்டியதுதான் என்று டில்லி சர்க்காரும் முடிவு செய்திருக்கிறதாம்...... இது முதல் திட்டம் பெற்றவெற்றி! இப்போது இரண்டாவது திட்டம் குறித்துப் பிரமாதப்படுத்தப்படுகிறது... ஆனால் முன்ஷி, குட்டை உடைக்கிறார்... சராசரி வருமானத்தை 23லிருந்து 30 ஆக்குவதே திட்டத்தின் இலட்சியம் என்று..."

"ஏன், மணிமுடி, உலகத்தில் சராசரி வருமானம் இங்குபோல்தான் எங்கும் உள்ளதா?"

"ஒவ்வொரு ஆண்டுக்கும் அமெரிக்காவில் ரூ. 9410, பிரிட்டனில் ரூ. 4351, பிரான்சு இருக்கிறதே தினம் ஒரு மந்திரி சபையாக வைத்துக்கொண்டு அங்குகூட ரூ. 3931, போரால் திண்டாடி இப்போது மூச்சுவிட ஆரம்பித்திருக்கும் ஜெர்மனியில் ரூ. 2690, நேரு சென்றுவந்தாரே அந்த ஜப்பானிலும் ரூ. 978, ஆனால் இந்தப் பாரத புண்ணிய பூமியில் மட்டும் ஒரு ஆளுக்கு ஒரு ஆண்டுக்குக் கிடைக்கும் சராசரி வருமானம் ரூ. 243"

"மலைக்கும் மடுவுக்கும் போலிருக்கிறதே மணிமுடி!!"

"ஆமாம் பெரியய்யா! இந்தச் சராசரி வருமானத்திலும், தென்னாட்டிலிருப்போர் மிகமிகக் குறைவாகப் பெறுகிறார்கள்."

"அதுதான் முன்பே சொல்லியிருக்கிறாயே! ஏன், மணிமுடி? நாமும் அமெரிக்கரைப்போல், பிரிட்டனைப் போல், நிறைந்த ஊதியம் பெற்று, நிம்மதியான வாழ்வைப் பெற வேண்டுமானால் இன்னும் ஒரு நூறு ஐந்தாண்டுத் திட்டங்கள் போட வேண்டும் போலிருக்கிறதே..."

"இவர்கள் ஆட்சியிலிருந்தால் அதுகூடப் போதாது பெரியய்யா! சமூகத்தின் அடிப்படையைச் சீர்படுத்தி, வருமானம் ஒரு இடத்திலே குவியாமல் தடுத்து, போடுகிற திட்டத்தின் பலனை 'பெருச்சாளி'கள் சுரண்டாதபடி செய்தால், நலம் பெறலாம். அதற்கு, ஒவ்வொரு பகுதியும், சிறிது சிறிதாக இருக்கவேண்டும். அப்போதுதான், அதது தன்னைப்பற்றிக் கவனித்து வாழமுடியும். வளமும், பெருகும். அதைவிட்டு, யானைக்குக் கோவணம் கட்டக் கிளம்பி, திண்டாடுகிறார்களே."

"இப்படித் திண்டாடுகிறவர்கள் உண்மையை மக்களிடம் சொன்னால் என்ன? ஏதோ, இந்த ஐந்தாண்டுத் திட்டமே எல்லோருக்கும் இன்ப மழை பெய்யப் போகிறது என்கிற நம்பிக்கையையல்லவா அதிகப்படுத்தி வருகிறார்கள்..."

"அப்போதுதானே ஓட்டுக் கிடைக்கும்!"

"ஆனால் உண்மை வெளியாகிற போது, ஏமாந்த மக்கள், இவர்களுக்கே அல்லவா வேட்டு வைத்து விடுவார்கள்..."

"அது நடக்காமலா போக போகிறது?"

"யாராரோ கூடிப் போட்ட இத் திட்டம், கடைசியில் இவ்வளவு தானா!"

"முன்ஷி, உடைத்துவிட்டார் குட்டை! வேண்டுமென்றல்ல, மக்களுக்குப் பொறுப்பை உணர்த்த வேண்டுமென்னும் ஆர்வத்தில்..."

அன்பழைப்பு

வருக! — என்று அன்பழைப்பு விடுத்திருக்கிறாராம் புதுசீனப் பிரதமரான சூ - என் - லாய்.

யாருக்குத் தெரியுமா?— பார்மோசாத் தீவிலே கிடந்தபடி, படையெடுப்பேன், செஞ்சீனாவைப் பிடிப்பேன் என்றெல்லாம் ஓலமிட்டுக் கொண்டிருக்கிறாரே, அந்த சியாங்கே ஷேக்குக்கு.

சியாங், புதுசீனத்தைப் பரம விரோதியாகப் பாவிக்கிறவர்! அவரை அழைக்கிறார், சூ - என் - லாய்!!

"வரட்டும். வந்து பார்க்கட்டும். அவர் ஆண்டபோது இருந்த சீனாவுக்கும், இப்போதுள்ள சீனாவுக்குமிடையிலே யிருக்கும் புது எழிலையும் முன்னேற்றத்தையும் அவரே காணட்டும்", என்று சூ-என் -லாய் தெரிவித்ததாக, அங்கு சென்றிருந்த ஜப்பானிய சோஷியலிஸ்டு பார்லிமெண்டு உறுப்பினரான அகரி என்பார் தெரிவிக்கிறார்.

"வந்து பார்த்துவிட்டுப் பிறகு பார்மோசாவுக்கு வேண்டுமானாலும் போகட்டும். பத்திரமாகக் கொண்டு சேர்ப்பது எமது பொறுப்பு", —என்றும், தெரிவித்தாராம். உள்ளபடியே, உள்ளமுருக்கும் அழைப்பு மட்டுமல்ல! பெருமிதமும் கண்ணியமும் கொண்ட அழைப்புங்கூட இது!!

அவர்களது ஆட்சியில் மலர்ந்துவரும் நன்மைகளைப் பற்றி சென்று வந்தோரெல்லாம், பெருமிதமாகத் தெரிவிக்கின்றனர். ஆனால், அமெரிக்கா ஒன்றுதான் இதை மறுத்து வருகிறது— அதை 'ஒரு நாடு' என அங்கீகரிக்கவும் மறுக்கிறது!!

அந்த அமெரிக்கா ஏன் இப்படிச் சொல்லுகிறதென்பதை உலகம் அறியும். பொதுநல நோக்கோடு பாடுபடும் சீனா, நல்ல பெயர் பெற்று வருகிறதே, என்பதுதான் அமெரிக்காவின் அசூயைக்குக் காரணம். அந்த அமெரிக்காவை மலைபோல நம்பும் சியாங், வரவா போகிறார் சூவின் அழைப்பையேற்று! அந்தப் பெருந்தன்மையும், காரியம் சாதிப்போரைப் பாராட்டும் குணமும் இருந்தால், பல பெரியவர்கள் எவ்வளவோ கீர்த்திக்கும் புகழுக்கும் ஆளாகியிருக்கலாமே!!